ஸ்டாலின்

[ஐவர் மாண்டேகு]

தமிழ்படுத்தியவர் கே. பாலதண்டாயுதம்

இரண்டாம் பதிப்பு

ஜனசக்தி பிரசுராலயம்

1/6, டேவிட்ஸன் தெரு, சென்னை

ஜனவரி 1944] [விலை 6 அணா

சென்னை "ஜனசக்தி" பிரஸில் பி. ராமமூர்த்தியால் அச்சிடப்பட்டு இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின், தமிழ் மாகாணக் கமிட்டியின் சார்பாகப் பிரசுரிக்கப்பட்டது.

முகவுரை

கோடிக்கணக்கான மக்கள் அன்பு கொண்டுள்ள ஸ்டாலின்; கோடிக்கணக்கான மக்கள் புகழும் ஸ்டாலின்; அவருடைய திறமையில் கோடிக்கணககான மக்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை. இவர் சென்றகாலத்தில் பல அவதூறுகளுக்கு ஆளாயிருக்கிருர். அதே ஸ்டாலினின் செய்கையையும், யோசனையையும் பொருத்திருக்கிறது இன்று உலகத்தின் வருங்காலம். முன்பு இருந்ததைவிட விசேஷமாகவே இதை உலக மக்கள் உணர்கின்றனர்.

ஸ்டாலின் செய்கைகளையும் எழுதிய புஸ்தகங்களையும் அறிந்துகொள்ளவேண்டும். ஏன்? இல்லாவிடில் அவரைத் தெரிந்துகொள்ள முடியாது.

அவருடைய வாழ்க்கை சரித்திரங்கள் பல; பலரால் எழுதப்பட்ட சரித்திரங்களில் பல நம்பமுடியாத புளுகுகள் கலந்திருக்கின்றன. அதற்குப்பின் வந்த நிகழ்ச்சிகள் அப் புளுகுகளை சந்தேகத்திற்கு இடம் வைக்காமல் சந்திக்கு இழுத்து சாயம் வெளுக்கச் செய்திருக்கின்றன. "ஸ்டாலின்" என்று ஹென்றி பார்பூஸ் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிருர். அது ஆதார பூர்வமானது. நன்ருகவும் எழுதப்பட்டிருக்கிறது. படிப்பதற்கும் லகுவாக இருக்கும், மற்ரென்று "ஸ்டாலின் வாழ்க்கையில் முக்ய கட்டங்கள்" என்று ஈ. யாரோஸ்லாவ்ஸ்கி எழுதியது.

நல்ல புஸ்தகங்களாயிருந்தபோதிலும் அவையிரண்டும் நிறைய பக்கங்கள் கொண்டவை. ஆதலால் சுருக்கமாக அவர் வாழ்க்கையின் போக்கை மட்டும் இப்புத்தகத்தில் குறிப்பிடுகிருேம்.

முன்னுரை

1941-ம் வருஷம் டிசம்பர் மாத ஆரம்பத்தில் எல்லா அயல்நாட்டுக் காரியாலயங்களையும் வெளியே போகச்சொல்லிவிட்டு மாஸ்கோவின் கிரெம்லின் கட்டிடத்தில் திடமான உறுதியுடன் உட்கார்ந்துகொண்டு, பகைவனை வீழ்த்துவோம் என்று திட்டம்போட்டுக்கொண்டிருந்த மகா வீரன் ஸ்டாலின். இந்த யுத்தத்தில் ஆக்கிரமிப்பு அரக்கர்களை அடித்து உதைக்கும் சக்தி ஒன்று உலக மக்களிடம் பிறந்துவிட்டது என்பதை அந்த டிசம்பர் மாதப் போராட்டத்தில் ஸ்டாலின் செஞ்சேனையின் வீரச் செய்கைகளினால் எடுத்துக்காட்டினார். அந்த நாளிலிருந்து இன்றுவரை ஸ்டாலின் தலைமையும், சோவியத் மக்களின் தீரமும், உலக மக்களின் முன்னேற்றமும் படிப்படியாக வளர்ந்து வருகின்றது. ஸ்டாலினின் தூரதிருஷ்டியும், திடசித்தமும் அவருக்கு மக்களிடமுள்ள அசையாத நம்பிக்கையும் சாதிக்க சந்தர்ப்பமளிக்கின்றன.

இந்த வெளியீடு ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. தோழர் பாலதண்டாயுதம் அதை மொழிபெயர்த்தார். இவ்விரண்டாம் பதிப்பில் சில திருத்தங்களைச் செய்ய தோழர் சுந்தரராஜன் உதவினார்.

சோவியத் ஜெர்மன் யுத்தம் ஆரம்பித்த பின்னர் 1942, 1943 வருஷங்களில் உலகத்திலே முதன்மையாகக் கருதப்பட்ட பிரமுகர் ஸ்டாலின். 1944 லும் அவருடைய பெயர் தான் முதன்மையாகக் கருதப்படும் என்று அமெரிக்கப் பத்திரிகைகள் கூறுகின்றன; அந்த வீர புருஷனின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க யார்தான் விரும்பமாட்டார்கள்.

ஜனசக்தி பிரசுராலயம்

ஸ்டாலின்

'ட்ஜுகஷ்வில்லி, ஜோஸப் விஸாரியானுவிச் ... கொஞ்சம் தடி...கர கரத்த குரல்... இடது காதில் சிறு மச்சம்......சாதாரண மண்டை—சாதாரண ஆளாகத்தான், தோற்றம் (1905-ல் ஸ்டாலினைப் பற்றி போலீஸ் இன்ஸ்பெக்டரின் ரிப்போர்ட்.)

"ஓ! ஸ்டாலின் பெரிய மஹான். அவருடைய அபார சக்தியை நேரிலே கண்டேன். திறமையுடன் புத்திசாலித்தனமாக ரஷ்ய மக்களுக்கு வழி காட்டுகிறார்; அவருடைய தலைமையில் எனக்கு அசாத்திய நம்பிக்கை பிறந்திருக்கிறது."

(ஸ்டாலினைப் பற்றி பிரிட்டிஷ் மந்திரி பிவர்புருக், நவம்பர் 8-ந் தேதி 1941.)

"நான் லெனினின் சிஷ்யன்; அவ்வளவு தான். உண்மையான சிஷ்யனாக இருக்க வேண்டுமென்பதே என்னுடைய ஆவலெல்லாம்."

(*ஸ்டாலின்*)

ஜோஸப் ஸ்டாலினுக்கு (யோசிப் விஸாரியனுவிச் ஸ்டாலின், பி. ட்ஜுகஷ்வில்லி) 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ந் தேதியன்று 62-ம் வயது பூர்த்தியாகின்றது. இந்த 62 வருஷங்களில் வாழ்க்கை மாறியிருக்

கிறது. அவருக்கு மட்டுமல்ல. அவரால் 20 கோடி மக்களுக்கு வாழ்க்கை மாறியிருக்கிறது. அநாகரிகமாயிருந்த மக்கள்—தங்களுக்குள்ளே விடாது சண்டையிட்டுக் கொண்டிருந்த பலதரமான மக்கள்—இன்று ஒற்றுமையான ஒரு குடும்பமாயிருக்கிறார்கள். நாகரிகத்திற்கும், அதன் நாசத்திற்கும் நடுவே நின்று நாகரிகத்தைக் காக்க சக்தி கொண்டிருக்கிறது ஒரே குடும்பம். பல கௌரவமான பண்டை நாடுகள் அழிந்தன; அந்த இடத்தில் தலை நிமிர்ந்து நிற்கும் இச் சமூகத்தை சிருஷ்டித்த இவர் எப்பேர்ப்பட்ட மனிதர்!

இளம்பிராயம்

ஸ்டாலின் 1879-ம் வருஷம் கோரி என்ற ஊரில் பிறந்தார். கோரி என்பது ஜார்ஜியாவிலிருக்கும் சிறு நகரம். பெரிய கிராமமென்றுதான் சொல்லலாம். அவர் பிறந்த இடம் ஒரு சிறு வீடு; அதற்கு செங்கல் அஸ்திவாரம், சுவர்கள் மரத்தில். கூரை பலகையில். ஊர் ஓரத்தில், செருப்புத் தைப்பவர்கள் சேரியில் இருந்தது. சேரிக்கு மத்தியில் ஒரு சிறு ஓடையுமிருந்தது. 5 கஜ விஸ்தீரணமுள்ள ஒரு அறையில்தான் குடும்பம் பூராவும் வசித்தது. அதை ஒட்டி ஒரு சமயலறை; வீட்டிற்கு வாசல்படி கூடக் கிடையாது. ஒரு மேஜை, ஒரு ஸ்டூல், ஒரு சோபா—பஞ்சு அடைத்ததல்ல, வைக்கோல் திணித்தது. இவைதான் அந்த வீட்டிலிருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் என்று அவருடன் படித்த ஒருவரிடமிருந்து நாமறிகிறோம்.

ஸ்டாலினின் தகப்பனார் செருப்புத் தைப்பவர்; விசேரியன் என்று பெயர். சில சமயம் வீட்டிலேயே செருப்பு வேலை செய்வார்; சில சமயங்களில் பக்கத்திலிருந்த தொழிற்சாலையில் வேலை கிடைக்கும். அங்கே சென்று வேலை செய்வார். அவருடைய தாய் யெகடெரினா (கேதரின்) வெளியில்

சென்று வண்ணுக்கி வேலே செய்வாள்: அப்படி வேலே செய்யாவிட்டால் ஜீவனத்திற்கு வழியில்லே. சில வருஷங்களுக்கு முன்புவரை அவர் உயிருடன் இருந்தார்; ஜார்ஜியாவின் தலேநகரமான ப்லிஸி (பழைய டிப்லிஸ்) நகரத்தில் வசித்தார். அந்த அம்மையார் கௌரவமான தோற்றத்துடனும் பண்டைக்கால கனமான கருப்பு தலேயணியும் மேல் முடியும் அணிந்துகொண்டிருந்ததாக அவர்களேப் பார்த்த சில வெளிநாட்டார்கள் கூறியிருக்கிருர்கள்.

ஸ்டாலின் ஏழு வயதில் பள்ளிக்கூடத்திற்குப் போய் ஜார்ஜியன் பாஷை, ரஷ்யன் பாஷை இரண்டையும் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். ஏழ்மையான குடும்பமாயிருந்தாலும் கஷ்டத்துடன் அவருடைய பெற்ருேர்கள் அவரை கோரியிலிருந்த கிருஸ்தவப் பாதிரிகளின் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினுர்கள். லெனினேப் போல இவரும் பள்ளிக்கூடத்தில் கெட்டிக்காரராயிருந்தார். முதல் மார்க்கு வாங்கி வந்தார். நற்சாட்சி பத்திரத்துடன் அங்கு படிப்பை முடித்தார், 1894-ம் வருஷம் டிப்லிஸிலிருந்த பாதிரி மடத்தில் சேர்ந்தார்.

பாதிரிப் பள்ளிக்கூடத்திலிருக்கும்பொழுது, டார்வின், மார்க்ஸ் இவர்களுடைய 'நாசகரமான' கொள்கையை படிக்கத் தொடங்கிவிட்டார். அங்கு படிப்பவர்களின் நடத்தையை ரகசியமாகக் கவனித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கும் பழக்கமிருந்தது. அதை வைத்துத்தான் அங்கு கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுவந்தது. இப்பழக்கத்தை ஸ்டாலின் வெறுத்தார்; அதை எதிர்த்தார். "இங்கு கையாளப்பட்ட ஜெஸுயிட் (பாதிரிமார்) முறைகளேயும், இக்கேவலமான நிர்வாகத்தையும் எதிர்த்து நான் புரட்சிக்காரனுகத் தயாராயிருந்தேன்; முடிவாக புரட்சிக்காரனுகவும் ஆனேன்" என்று பிற்காலத்தில் ஸ்டாலின் கூறினுர்.

15 வயதாயிருக்கும்போதே டிரான்ஸ்காகேஷியாவில் மறைமுகமாக இருந்துவந்த மார்க்ஸிய கூட்டத்துடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். மடத்திற்கு வெளியி லிருக்கும் புத்தகசாலேகளில் சேர்ந்து மடத்திலிருப்போர் புஸ்தகங்கள் வாங்கி வாசிக்கக்கூடாது என்ற தடை இருந்தது. இருந்தபோதிலும் ஸ்டாலின் ஒரு புத்தகசாலேயில் சேர்ந்தார். சரித்திரப் புஸ்தகங்களும், ஷேக்ஸ்பியர் உள் பட எல்லா நூல்கஃளயும் கரைத்துக் குடித்தார். மார்க்ஸ் எழுதிய "மூலதனம்" ஒரே பிரதிதானிருந்தது. மாணவ ரிடமிருந்து ஒவ்வொரு சம்படியாக வசூலித்து வாங்கியது. அதுவும் பூராவும் கையாலேயே எழுதப்பட்ட பிரதி.

இக்காலத்தில் ஸ்டாலின் பல பாட்டுகள் எழுதினர்; அவை அந்நகரத்தில் பல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட் டன. கோஷ்டிகள் சேர்ந்து பாட்டுப் பாடுவது உண்டு. அவற்றில் இவர் முக்கியமாக இருப்பார். மெலிந்த திரேகம், நீண்ட முகம், விரிந்து இருண்ட கண்கள்; கரிய கனத்த ரோமம்; அவருடன் படித்த மாணவர்களிடையே அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருந்து வந்திருக்கிறது. அவர்க ளுடைய ஞாபகத்திற்கு வரும் சில பதங்களிலிருந்து அது தெரிந்தது; 'சுருக்கம்', 'தெளிவு', 'பிழையின்மை', 'நல்ல குணம்', 'ஆழ்ந்த அறிவு', இப்பதங்களெல்லாம் அவர் குணநிசயங்கஃள வர்ணிக்க அவரது சகாக்களால் கூறப்பட்டவை. 1896-ல் பாதிரி மடத்திற்குள்ளேயே மார்க் ஸிய படிப்புக் கூட்டம் ஒன்று அமைத்தார்; அதில் பொரு ளாதாரம், விஞ்ஞானம், தத்துவம் பற்றிய புஸ்தகங்கள் படித்தார்கள்.

1898-ல் மாணவர்கள் முதன்முதலாக தங்களுடைய சொந்த பத்திரிகையை—(அவை அச்சிடப்படவில்ஃல)–டைப் செய்து சைக்லோஸ்டைல் மூலம் பல பிரதிதளாக்கி—பிர

சரித்தனர். அந்தசமயம் லெனின் பீடர்ஸ்பர்க்கிலிருந்தார். அப்பொழுதுதான் லெனின் எழுதிய ஒரு கட்டுரையை முதல்தரம் ஸ்டாலின் வாசித்தார். வெகுதூரத்திலிருந்த இருவருக்கும் முதன்முதலில் இப்படித் தொடர்பு ஏற்பட்டது. இதில் ஒருவருக்குத் தொடர்பு ஏற்பட்டதே தெரியாது. இத் தொடர்புதான் பின்னர் உலகத்தில் ஆறில் ஒருபாகத்தை மாற்றியமைத்தது. அதிலிருந்துதான் அன்று சிறுவனுகை இருந்த ஸ்டாலின், தன்னைவிட வயதில் முதிர்ந்த லெனினின் கொள்கைகளை, தானும் உணர்ந்து மற்றவர்களுக்கும் உணர்த்த ஆரம்பித்தார். முதலில் டிரான்ஸ்காகேஷியாவி லிருந்த மார்க்ஸியர்களிடையே ; பிறகு எல்லாதேசத் தொழிலாளர் இயக்கத்திற்கும்.

வெளியிலுள்ள புத்தகசாலையில் சேர்ந்ததற்காக ஸ்டாலினுக்கு பாதிரிப் பள்ளிக்கூடத்தில் தண்டனை கிடைத்தது. வெளிப் புத்தகசாலையில் சேர்ந்தார் என்பதற்காக மட்டுமல்ல ; விக்டர் ஹ்யூகோ எழுதிய புஸ்தகங்கள் வாசித்து வந்தாரென்ற குற்றத்திற்கும் தண்டிக்கப்பட்டார். இறுதியாக, **1899**-ல் ஸ்டாலின் பாதிரிப் பள்ளிக்கூடத்திலிருந்து நீக்கப்பட்டார். அவருடைய "அரசியல் கொள்கைகளால் நம்பத்தகாதவர்" என்று காரணம் காண்பித்தனர். அன்றிருந்தே அவர் முழுநேரம் வேலைசெய்யும் புரட்சிக்காரரானர்.

புரட்சி வாழ்க்கையின் ஆரம்பம்

டிரான்ஸ்காகேஷியாவில் இந்தசமயம் அதிவேகமான மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன. 1895-ம் வருஷத்திற்கு முந்திய முப்பது வருஷங்களில் நகரவாசிகளின் ஜனத்தொகை மூன்றுமடங்கு அதிகரித்துவிட்டது. ஒருபக்கத்தில் பெரிய தொழிற்சாலைகள். உதாரணமாக பாகு எண்ணெச் சுரங்

கங்கள். இவற்றின் மூலதனம் பெரும்பாலும் வெளிநாட்டு முதலாளிகள் கொண்டுவந்து போட்டது. தொழிலாளிகள் 14 மணி நேரம் வேலை வாங்கப்பட்டனர்; சகிக்கமுடியாத நிலைமை. அதேசமயத்தில் மற்றொருபுறம் பிரபுத்வ அமைப்பு இருந்து வந்தது. கிராமங்களில் இன்னும் புராதன சமூக அமைப்புகளும் இருந்துவந்தன.

பலவித அரசியல் கொள்கைகள் அந்தப் பிரதேசத்தில் நிலவின: பண்டைகாலக் கீர்த்தியைப் பாடும் பிரபுத்வ தேசியம்; அதோடு ஒப்பிட்டால், முற்போக்காயிருக்கும், பூர்ஷ்வா (முதலாளித்துவ) இயக்கங்கள்; 19–வது நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய மார்க்ஸிய இயக்கம்; இவ்வாறு பலவகைப்பட்ட அரசியல் கொள்கைகள்; மார்க்ஸிஸ்ட் இயக்கத்தில் ஸ்டாலின் சேர்ந்தார். அந்த இயக்கத்தின் அன்றிருந்த தலைமைப் பதவியுடன் ஸ்டாலினுக்கு அபிப்பிராயத்தில் வித்தியாசமேற்பட்டது. லெனினுடைய "தொழிலாள வர்க்கத்தின் விடுதலைப் போராட்ட லீக்"கின் கொள்கைகளைப் படித்து அதில் பற்றுதல் உண்டாயிற்று; ஆதலால் ஸ்டாலின், பத்திரிகையும் பொதுஜனக் கிளர்ச்சியும் அவசியமென்று வற்புறுத்தினர்; அவற்றைப் போலீஸ் தடைசெய்தாலும் பொருட்படுத்தக் கூடாதென்றார்.

1898-ம் வருஷம் டிப்லிஸில் ரயில்வேத் தொழிலாளர்களையும் மற்ற தொழிலாளர்களையும் வேலை நிறுத்தத்திற்கு ஸ்டாலின் ஒன்றுபடுத்தினர்; வேலை நிறுத்தத்திலும் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். 1899ல் டிரான்ஸ்காகேஷியாவில் ஸ்டாலின் தலைமையில் முதல் மே தினம் கொண்டாடப்பட்டது. மற்ற இடங்களுக்கு இக் கொண்டாட்டம் வழிகாட்டியாயிருந்தது. 1900ல் மேதினக் கொண்டாட்டத்திற்கு 500 பேர் வந்திருந்தனர். 1901ம் வருஷம் 2000 பேர் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்; போலீஸ் அவர்களைத் தாக்கிற்று.

கொஞ்சகாலம் ஸ்டாலின் ஒரு தோழருடன் சேர்ந்து ஒரு ஆப்ஸர்வேடரியில் (வான ஆராய்ச்சி சாலையில்) வேலை பார்த்து வந்தார். இந்நிலைமையில் அவர் தலைமறைவாகப் போகவேண்டியதாயிற்று. அதே வருஷம் டிப்லிஸ் சோஷல் டெமாக்ரேடிக் கட்சியின் முதல் மகாநாடு நடந்தது; அதில் ஸ்டாலின் கட்சிக் கமிட்டி அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். கட்சிக் கமிட்டி ஸ்டாலினை பாட்டும் என்ற நகரத் திற்கு அனுப்புவது என்று முடிவு செய்தது. ராத்சைல்டு, மாண்டஷேவ் என்ற இரு பெரிய முதலாளிகளுக்குச் சொந்தமான பெரிய தொழிற்சாலைகள் அங்குதானிருந்தன. போலீஸ் கண்காணிப்பு பலமாக இருந்தது. இதனால் சோஷல் டெமாக்ரேட்களிடையே 'பழைய பேர் வழிகள்' தொழிலாளர் இயக்கமே நடத்தமுடியாது என்று அபிப்பிராயப் பட்டார்கள். ஆனால் 1902ம் வருஷத்திற்குள் பெரும்பான்மையான தொழிற்சாலைகளில் சங்கங்கள் அமைக்கப்பட்டு தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்று சேர்க்கப்பட்டனர்; அதைத் தொடர்ந்து, பொறுக்கமுடியாத நிலைமையை எதிர்த்து வேலைநிறுத்தங்களும் கிளம்பின. தொழிலாளர்களின் பிரம்மாண்டமானதொரு கூட்டத்தின் மீது போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். ஸ்டாலின் தன் படுக்கை அறையில் இரகசிய அச்சாபீஸ் வைத்திருந்தார்; அது கண்டுபிடிக்கப்பட்டு ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். 1903ல் சைபீரியாவிலிருக்கும் 'இர்கட்ஸ்க்' என்ற இடத்திற்கு நாடு கடத்தப்பட்டார். ஆனால் 1904ல் ஸ்டாலின் திரும்பவும் பாட்டும் நகரில் இருந்தார்!

இதிலிருந்து போலீஸ் ஸ்டாலினைப் பிடிப்பதும், அவர் அவர்களிடமிருந்து தப்புவதுமாகக் கதை ஆரம்பித்தது. பல முறைகள் தப்பியிருக்கிறார்; அவற்றின் விபரம் அசாத்தியமானது. சாதாரண மான நிகழ்ச்சிகளல்ல வென்பதைப் பின்வரும் குறிப்புகளிலிருந்து காணலாம்.

(1) 1902: ஏப்ரல் மாதம் பாட்டும் என்ற இடத்தில் கைதி; அங்கேயே சிறையில் வைக்கப்பட்டார். பிறகு குடேய்ஸ் என்ற இடத்தில் கொஞ்ச காலம் வைக்கப்பட்டார். 1903 நவம்பரில் கிழக்கு சைபீரியாவில் இர்கட்ஸ்க் என்ற இடத்திற்கு மூன்று வருடகாலத்திற்கு நாடு கடத்தப்பட்டார். 1904 ஜனவரி மாதம் தப்பினார்.

(2) 1908 மார்ச்சு மாதம் பாகுவில் கைதி. பைலாவ் சிறையில் அடைக்கப்பட்டார், செப்டம்பர் மாதம் இரண்டு வருஷத்திற்கு வாலோக்டா மாகாணத்தில் சால்வி செகாட்ஸ் என்ற இடத்திற்கு நாடுகடத்தப்பட்டார். 1909 ஜூன் மாதம் தப்பியோடிவிட்டார்.

(3) 1910 மார்ச்சு மாதம் பாகுவில் கைதி. மறுபடியும் சால்வி செகாட்ஸ்க்குக்கு செப்டம்பரில் நாடுகடத்தப்பட்டார். 1911 ஜூலையில் தப்பினார்.

(4) 1911ல் செப்டம்பர் மாதம் செயின்ட் பீடர்ஸ்பர்க்கில் கைதி. மறுபடியும் சால்வி செகாட்ஸ்க்குக்கே டிசம்பரில் நாடு கடத்தப்படுதல். 1912 பிப்ரவரியில் தப்பித்தல்.

(5) 1912 ஏப்ரல் மாதம் செயின்ட் பீடர்ஸ்பர்க்கில் கைதி. மேற்கு சைபீரியாவின் வடபகுதியிலிருக்கும் நரிம் பிரதேசத்திற்கு கோடைக்காலத்தின் ஆரம்பத்தில் நான்கு வருஷ தண்டனையுடன் நாடு கடத்தப்படுதல். அதே வருஷம் மத்திய கோடைக்காலத்தில் தப்பித்தல்.

(6) 1913 ஏப்ரல் மாதம் செயின்ட் பீடர்ஸ்பர்க்கில் கைதி. ஜூன் மாதத்தில், வடதுருவத்திற்கு 70 மைல் தூரத்திலிருக்கும் குலேகாவில், துருக்கான் பிரதேசத்திற்கு நாடு கடத்தப்படுதல். கிராஸ்னுயர்ஸ்க், அதற்குப்பிறகு ஆகின்ஸ்க், இவ்விடங்களுக்கு 1916ல் மாற்றம். 1917 பிப்ரவரியில் திரும்பினார்.

இம்மாதிரி ஸ்டாலின் 6 முறை கைதிசெய்யப்பட்டு சிறையிலிடப்பட்டார். 5 தரம் சிறையிலிருந்து தப்பினர். 1901 லிருந்து 1917 வரை, அதாவது 16 வருஷத்திய தலை மறைவான வாழ்க்கையில், 8 வருஷங்கள் நாடுகடத்தப்பட்டும் சிறையிலும் கழித்தார். ஆனல் இவ்வருஷங்களில் எத்தகைய வேலையை செய்தார்! அளவுகடந்த வேலைகள் செய்தார்; வெளியிலிருக்கும்போதும் சரி, சிறையிலிருக்கும் போதும் சரி. சிறுவனயிருந்த 'ட்ஜுகஷ்வில்' ஒரு ஆளாய் விட்டார். மெல்லிய சிறுவன் வலுப்பெற ஆரம்பித்தான்; கருத்த சிறுதாடி முளைக்கத் தொடங்கிற்று. மயிர் எப்பொழுதும்போல் கருத்து அடர்த்தியாயிருந்தது. புனைப் பெயர்கள் பல—சோசோ (இது செல்லப் பெயர். தன்னுடைய பெயரின் சுருக்கம்), கோபா, டேவிட், இன்று உலகமெங்கும் அவரை அழைக்கும் பெயர் ஸ்டாலின். இதுவன்றி இன்னும் பல பெயர்களும் உண்டு. கைதியான சமயங்களுக்கு இடையில் அவர் பாட்டும், டிப்லிஸ் ஆகிய விடங்களிலும், மலைகளிலும், முக்கியமாக பாகுவில் எண்ணைச் சுரங்கத் தொழிலாளர்களிடத்திலும் வேலை செய்தார்.

அவருடைய வேலைகள் பலதரப்பட்டவை. தொழிற் சங்கங்கள் அமைத்தல், இரகசிய வேலைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தல், அச்சிடுவதற்கு பிரஸ் நடத்துவது, பொய் பாஸ்போர்ட்டுகள் தயாரித்தல், வெகு சமாதானமாக இருக்கும் தொழிலாளிகளின் ஆர்ப்பாட்டங்களையும் அக்காலத்தில் பலாத்காரம் கொண்டு ஜாரரசனின் போலீஸ் படைகள் தாக்குவதுண்டு; அதைச் சமாளிக்க தொழிலாளர் ஸ்தாபனங்களில் தற்காப்புப் பயிற்சி கோஷ்டிகள் ஏற்படுத்துவது—இவற்றையெல்லாம் அவர் கவனித்துக்கொண்டார். இந்தக் காலத்தில்தான் 1905-ம் வருஷப் புரட்சி நடந்தது. போலீஸ் ஏற்படுத்திய 'சட்டரீதி'யான தொழிற் சங்கங்களை எதிர்த்துப் போராடியதல்லாமல் தனியாக தொழிற்

சங்கங்களை ஸ்தாபிப்பது. மென்ஷ்விக்குகள் (மார்க்ஸீய கட்சியின்வளர்ச்சிக்கு லெனின் பிரேரேபித்த கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்கள்), அராஜக வாதிகள், தேசீய வாதிகள் ஆகியவர்களுடைய போக்கைக் கண்டித்து பகிரங்கமாகவும், இரகசியத் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலமும், வளர்ந்து வந்த தொழிற்சங்க இயக்கத்தின் தலைமைப் பதவியை நிலைநாட்டப் போராட்டம்.

சிறை வாசற்படியோடு போலீஸின் பலாத்காரம் நின்றுவிடவில்லை. கைதியான பிறகுகூட ஸ்டாலினின் பல தோழர்கள் கொலை செய்யப்பட்டனர்; இன்னும் சிலர் அடித்து நொறுக்கப்பட்டனர். இரண்டு வரிசையில் சிப்பாய்களை நிற்கச்செய்து, நடுவில் நடப்பதற்கு இடம் விட்டு, அதில் கைதியை நடக்கச் சொல்லி, இரு வரிசையிலிருந்தும் சிப்பாய்கள் சரமாரியாக அடிப்பது, அரசியல் கைதிகளுக்கு ஒரு தண்டனை. ஒரு முறைகூட உடலை வளைந்து கொடுக்காமல் ஸ்டாலின் இத்தண்டனையில் நடந்து காண்பித்தார். இருபுறமிருந்தும் அடிக்கிறார்களே யென்று அவசரமாக அடியெடுத்து வைக்கவில்லை; நிதானமாகவே நடந்தார்.

இருந்தாலும் சிறையிலிருப்பவர்கள் வெளியே புரட்சி இயக்கத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டுதானிருந்தார்கள். உள்ளே இரகசியமாக வகுப்புகளும் நடத்திவந்தார்கள். இர்கட்ஸ்க்கில் இருக்கும்பொழுதுதான் (1903–ம் வருஷம்) ஸ்டாலின் லெனினுடன் முதன்முறை கடிதப் போக்குவரத்து நடத்தினர். கொடிய வாழ்க்கை. ஒன்று உயிர் போகும், அல்லது உடம்பு இறுகும்; இதில் இரண்டு மூண்டு, கடும்பனியில் ஸ்டாலின் ஒரு முறை சிக்கிக் கொண்டார். 16 மணி நேரத்திற்கு மூர்ச்சை யிழந்தார். இது நன்மையாகவே முடிந்தது. க்ஷயரோகம் வருவதற்கிருந்த குணங்கள்

அசாத்திய குளிரினல் ஒழிந்தன. மறுபடி க்ஷயரோகம் வரவேயில்லை.

இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையிலும் வெளிநாடுகளுக்கும் போக முடிந்தது. 1905-ம் வருஷம் நாடு கடத்தப்பட்டிருந்தவர் சைபீரியாவிலிருந்து பின்லாந்திற்கு 4-வது போல்ஷவிக் மகாநாட்டிற்கு, பிரதிநிதியாகச் சென்ருர், 1906ம் வருஷம் ஸ்டாக்ஹோம் காங்கிரஸிற்கு பிரதிநிதியாகச் சென்ருர். 1907ல் பெர்லினுக்கு; அங்கிருந்து லண்டனில் நடந்த ஐந்தாவது காங்கிரஸிற்குப் பிரயாணம். 1912-ல் மறுபடியும் மத்திய ஐரோப்பாவிற்குச் சென்ருர். இரண்டு முறையும் லெனினைக் கலந்துகொண்டு போவதற்கே.

பின்லாந்தில் டேமர்போர்ஸ் போல்ஷவிக் மகாநாட்டில் தான் லெனினை ஸ்டாலின் முதல்தரம் சந்தித்தார். பார்த்ததும் லெனினை "கட்சியின் மலைக்கழுகு" என்று ஸ்டாலின் வர்ணித்தார். அந்த சந்திப்பு மறக்க முடியாத தொன்ருக இருந்தது. ஸ்டாலினின் குணநிசயங்களை தெரிந்துகொள்ள லெனினுக்குக் காலம் பிடிக்கவில்லை. "ஒரு அபூர்வமான ஜார்ஜியன்" என்று லெனின் ஸ்டாலினைப் பற்றி மேக்ஸிம் கோர்கிக்கு எழுதினர். புரட்சிக்காரர்களிடையே பல வேறுபட்ட அபிப்ராயங்கள் இருந்துவந்தன. அதில் எல்லாவற்றிலும் லெனின், தன்னுடைய தூரதிருஷ்டியினல் நேரான வழியைக் கடைப்பிடித்து வந்தார்; ஸ்டாலினும் எல்லா சமயத்திலும் அதே வழியில் சென்ருர்.

இதற்கு, கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதென்று அர்த்தமல்ல. அவர் லெனினின் உண்மையான சிஷ்யர் என்பதையே இது காட்டுகிறது. காட்ஸ்கி, 1905ம் வருஷப் புரட்சியைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிருர். அது ரஷ்யாவிலும், லெனினல் பிரசுரிக்கப்பட்டது; அதே சமயத்தில் சுயேச்சையாக ஸ்டாலினும் அதே புஸ்தகத்தை பிரசுரித்

தது மற்றவருக்கும் தெரியாது. இருவரும் அப்புஸ்தகத்திற்கு முன்னுரை எழுதினார்கள். இரண்டையும் ஒத்துப் பார்த்ததில், ஒரே கொள்கை இரண்டிலும் காணப்பட்டது.

வாழ்க்கையை மார்க்ஸீய முறையில் பரிசிலனை செய்வது லெனினிஸம். மார்க்ஸ் இறந்த பிறகு கிடைத்த அனுபவத்தையும் அது சேர்த்துக் கொண்டிருக்கிறது. அதைக் கொண்டுதான் லெனின் ரஷ்ய மக்களுக்கு வழிகாட்டி ஜார் ஆட்சியை ஒழித்தார். வாலிப காலத்திலேயே புரட்சிக்கு ஸ்டாலின் செய்த பெரும்பணி சிக்கலான தேசிய பிரச்னைக்கு மார்க்ஸீய, லெனினிஸக் கண்ணோட்டத்தில் வழிகண்டு பிடித்தது; அது 1913–ல் பிரசுரிக்கப்பட்டது.

இப்பிரச்னையைப் பற்றி எழுதுவதற்கு ஸ்டாலினுக்குத் தகுதியிருந்தது; ஏனெனில் அவர் பிறப்பிடமாகிய *டிரான்ஸ் காகேஷியாவில்*, தேசிய இனங்கள் பல; ஜார்ஜியர்கள், அஜெர்பெய்ஜானியர்கள், ஆர்மீனியர்கள், யூதர்கள், துருக்கியர்கள், டாகெஸ்தேனியர்கள், ஒஸேஸியர்கள், மிங்ரேலியர்கள், பாரசீகர்கள், இன்னும் பல இனங்கள்; இவர்களிடையே விடாது சண்டையிருந்துகொண்டேயிருக்கும்; ஒருவர் குரவளையில் மற்றவர் கை என்ற நிலைமை; ஆனால் எல்லோரும் ரஷ்ய இனத்தின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தனர். இப்பிரச்னையைப்பற்றி ஸ்டாலின் எழுதியதை லெனின் புகழ்ந்தார்.

பிற்காலத்தில் அதை நடைமுறையில் கொண்டுவரும் பொறுப்பும் ஸ்டாலினைச் சேர்ந்தது. அவர் தேசிய இனங்களுக்கு கமிஸார் (மந்திரி) ஆக்கப்பட்டார். புரட்சி ஏற்பட்டதும் தேசிய இனங்களின் பிரச்னையைத் தீர்க்க வகுத்த மார்க்கத்தை காரியத்தில் செய்து பரிட்சிக்க முடிந்தது. வெற்றியும் கிடைத்தது. ரஷ்யாவில் நூற்றுக்கு மேலான தேசிய இனங்களிருக்கின்றன. ஒவ்வொரு தேசிய இன

மும் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றது. இதுவரை கண்டிராதவாறு ஒரு பொது அரசாங்கத்தின் கீழ் பரஸ்பர நம்பிக்கையுடனும் ஐக்யத்துடனும் அவை வாழ்கின்றன. ஐக்ய சோவியத் சோஷியலிஸ்டு ருஷ்யாவிற்குள் நிற பேதங்களோ, தேசிய பேதங்களோ காண்பிக்கக்கூடாது. இப்பேதங்களை வைத்து சலுகைகள் அனுபவிப்பது, அல்லது ஒரு தேசிய மக்களுக்கு விரோதமாக மற்ற தேசிய இனங்களிடையே தப்பபிப்பிராயங்களை வளர்ப்பது ஆகிய இவற்றிற்கெல்லாம் அனுமதியில்லை; நிறபேதங்களுக்கு நடைமுறையிலும், பிரசாரத்திலும் தடை. இதற்கு சோவியத் (ஸ்டாலின்) அரசியல் அமைப்பில் ஒரு ஷரத்திருக்கிறது. ஏசுநாதரின் பேரால் சகோதரத்வம் என்று 2000 வருஷங்களாக பல நாடுகளில் பறையடித்து வருகிறார்கள். பல தேசங்களின் அரசியல் அமைப்பின் அஸ்திவாரம் வாயளவில் நிற பேதங்களை கண்டிக்கிறது. ஆனால் எந்த நாடும் நிறபேதத்தை ஒழிக்கும் ஒரு சட்டத்தை பிரகடனம் செய்யத் துணியவில்லை.

1910-ம் வருஷத்திற்குப்பின் ஸ்டாலின் பாகுவிற்குத் திரும்ப வரவில்லை. பீடர்ஸ்பர்க்கில் இருந்துவந்தார், 1905 வது வருஷத்திய புரட்சிக்குப்பின் ஆலோசனைக் கமிட்டி அந்தஸ்தில் டூமா வென்று அழைக்கப்படும் சட்டசபையை

ஜார் அனுமதித்தார். பீடர்ஸ்பர்க்கில் இருந்துகொண்டு ஸ்டாலின் அதன் தேர்தல் வேலையில் ஈடுபட்டார். டூமாவில் அங்கத்தினர்களாக இருந்த போல்ஷ்விக்குகளின் தினசரி வேலைக்கும் வழிகாட்டி வந்தார். 1912-ம் வருஷம் பிரேகில் நடந்த போல்ஷ்விக் மகாநாட்டிற்குப் போகமுடியவில்லை. போவதற்குத் தயாராகத்தானிருந்தார். 1911-ல் கைதியானார். மகாநாட்டிற்குப் போகாதபோதிலும் மத்தியக்கமிட்டி அங்கத்தினராக அவர் அம்மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்துடன் ரஷ்யப் பிரிவிற்கு தலைவராகவும் நியமிக்கப்பட்டார். போல்ஷ்விக்குகளில் ரஷ்யாவிலிருந்துகொண்டு வேலை செய்துவந்த முக்கிய தோழர்களே இப்பிரிவு.

கட்சிக்கு தன் மீது இருந்த நம்பிக்கையைப் பார்த்து அவருக்கு உற்சாகம் அதிகரித்தது. உடனே சிறையிலிருந்து தப்பினார். பிராவ்தா (Pravda—உண்மை) என்ற போல்ஷ்விக் பத்திரிகையை பிரசுரிக்க ஏற்பாடுகள் செய்தார். அந்த பத்திரிகையின் முதல் இதழ் வெளியாகும் தினத்தன்றே அவர் கைதியானார். ஆனால் சில மாதங்களில் மறுபடியும் தப்பித்து வந்துவிட்டார். வெளியில் வந்ததும் தொடர்ந்து டூமாவின் போல்ஷ்விக் அங்கத்தினர்களுக்கும் பத்திரிகைக்கும் வழி காட்டிவந்தார். ஒருநாள் தலைமறைவாக இருந்த தோழர்கள் கூட்டம் ஒன்று நடைபெற வேண்டியிருந்தது. அக்கூட்டத்திற்கென்று போலீஸ் கண்காணிப்பிலிருந்து தப்ப, சங்கீதக் கச்சேரி நடக்கும் ஒரு இடத்திற்குச் சென்றார்கள். அங்கு பெருங் கும்பலாக இருப்பதனால் இவர்களை சந்தேகிக்க இடமிருக்காது. அவர்களுடனிருந்த டூமாவின் போல்ஷ்விக் அங்கத்தினர் ஒருவர் போலீஸின் கையாள். இது மற்றத் தோழர்களுக்குத் தெரியாது; அந்த அங்கத்தினரால் காட்டிக் கொடுக்கப்பட்டு இம்முறையும் 1913-ல் கைதியானார்.

இம்முறை தப்பமுடியவில்லை ; கடைசியாக ஜார் அரசாங்கம் வடதுருவத்திற்குப் பக்கத்தில் தப்பிப் போவதற்கு வழியின்றி நான்கு வருஷங்கள் வைத்திருந்தது. படிப்பது, எழுதுவது, கூடவிருந்த மற்ற தோழர்களுடன் விவாதிப்பது; இம்முறையில் ஸ்டாலின் அந்த நான்கு வருஷங்களையும் கழித்தார் ; அங்கிருந்து ரகசியமாக கடிதங்கள் வெளியே அனுப்பிக்கொண்டும், வெளியிலிருந்து பெற்றுக்கொண்டுந் தானிருந்தார் ; பொழுதுபோக்குக்கு வேட்டையாடுவது, மீன் பிடிப்பது ; தாங்களாகவே செய்த கோடாலி எறியீட்டி கொண்டு, சமுத்திரத்தில் உறைந்துகிடக்கும் பனிக்கட்டியை உடைத்துக் குழிசெய்து அதில் மீன்கள் பிடிப்பார்கள். 1914-ம் வருஷ யுத்தத்தின் முதல்வருஷத்தை ஸ்டாலின் இங்குதான் கழித்தார். யுத்தத்தில் பல பிரச்னைகள் கிளம்பின : இப்பிரச்னைகளைப் பற்றியும், என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் ஸ்டாலின் கடிதங்கள் எழுதினர் ; அவை இன்றும் இருக்கின்றன. லெனினும், ஸ்டாலினும் அக்காலத்தில் ஒருவருக்கு ஒருவர் எட்டாததூரத்தில் இருந்தனர். இருந்தபோதிலும் அந்தக் கடிதங்களில் அவர் எழுதிய கொள்கையும், அதே பிரச்னைகளைப் பற்றி லெனினுடைய கொள்கையும் ஒன்றுகவே இருந்தன.

1917ம் வருஷம் பிப்ரவரி மாதம் ஜார் வீழ்ந்தான். சிறைக் கதவுகள் திறக்கப்பட்டன. நாடுகடத்தப்பட்டவர்கள் நாடுவந்தனர். இரண்டு வாரங்களுக்குள் ஸ்டாலின் பெட்ரோகிராடிற்கு வந்துவிட்டார்; செயின்ட் பீடர்ஸ்பர்க்கின் புதிய பெயர் பெட்ரோகிராடு. பிராவ்தா பத்திரிகை வேலைக்கு ஆலோசனை கூறிவந்தார். அதன் மூலம் எல்லா போல்ஷ்விக்குகளுக்கும் கட்சிவேலையில் வழிகாட்டிவந்தார். தலைமறைவாக இருந்த எல்லா போல்ஷ்விக்குகளும் வெளிவர முடிந்தது.

ஏப்ரல் மாதத்தில் லெனினும் வெளிநாட்டிலிருந்து ரஷ்யாவிற்குத் திரும்பிவந்தார். ரஷ்ய எல்லையிலேயே லெனினை ஸ்டாலின் சந்தித்தார், அவருடன் பெட்ரோகிராடிற்குப் பிரயாணம் செய்தார். லெனின் மே மாதம் போல்ஷ்விக் காங்கிரஸில் கொண்டுவந்த சித்தாந்தத்தை ஸ்டாலின் ஆதரித்தார்; அதிலிருந்து இருவரும் நெருங்கி வேலை செய்தனர். பிராவ்தாவில், இருவருடைய தலையங்கங்களும் மாறிமாறி வந்தன. நேரடியாக, லெனினுடன் இருந்து வேலைசெய்தது ஸ்டாலினுக்கு இதுதான் முதல் சந்தர்ப்பம். "இதுதான் எனக்கு புரட்சி நெருப்பில் ஆரம்ப ஞானஸ்நானம்" என்று ஸ்டாலின் சொல்லியிருக்கிறார். அக்காலத்தில் அவருக்கு அளவு கடந்த அறிவு வளர்ச்சி அடையமுடிந்தது என்கிறார்.

ஜூலை மாதத்தில் தற்காலீக கிரேன்ஸ்கி சர்க்கார் மறுபடியும் போல்ஷ்விக்குகள் மீது அடக்குமுறையை ஆரம்பித்தது. லெனின் பின்லாந்தில் தலைமறைவாக இருந்துகொண்டு வேலை செய்யவேண்டியதாயிற்று. ஸ்டாலின் பத்திரிகைக்கு தலைமையாக இருந்தார்; அதோடு லெனினிடம் தொடர்பும் வைத்துக்கொண்டிருந்தார்; அதனால் லெனின் பின்லாந்திவிருந்தாலும் ஸ்டாலின் மூலமாகக் கட்சிக் கொள்கைக்கு வழிகாட்டமுடிந்தது. இலை உதிர்காலத்தில் போல்ஷ்விக்குகள் புரட்சிக்குத் தயார் செய்யத் தொடங்கினார்கள்.

புரட்சிக்கு அரசியல் ரீதியாகத் தயாரிப்புகள் செய்வதற்கு ஐந்துபேர் கொண்ட ஒரு கமிட்டியைக் கட்சி அமைத்தது; அதில் ஸ்டாலின் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். புரட்சிக்கு ஸ்தாபனரீதியான தயாரிப்புக்கு 7 பேர்கொண்ட கமிட்டி; அதிலும் ஸ்டாலின் அங்கத்தினராக்கப்பட்டார். அக்டோபர் மாதம் 10-ம் தேதி போலிட் பீரோவில் (மத்தியக் கமிட்டியின் பகுதியில்) அங்கத்தினராக்கப்பட்டார். அன்று கட்சியின் மத்தியக் கமிட்டியால் புரட்சியை நடத்தும்

பொறுப்பு போலிட் பீரோவிற்கு விடப்பட்டிருந்தது. அதே மாதம் 16-ம் தேதி புரட்சியை நடத்தும் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு ஸ்டாலின் தலைவரானார்.

அக்டோபர் மாதம் 24-ம் தேதி (தற்கால காலண்டர்ப்படி நவம்பர் 6-ம் தேதி) தலைமறைவாக இருந்துவந்த லெனின் வெளிவந்தார்; ஸ்டாலினும் லெனினும் மறுநாள் அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். அதிகாரத்தையும் கைப்பற்றினார்கள், அக்டோபர் 27-ம்தேதி சோவியத் சர்க்கார் அமைக்க சோவியத்துகளின் காங்கிரஸில் தீர்மானம் நிறைவேறிற்று. கவுன்ஸிலின் தலைவராக லெனினும், தேசீய இனங்களின் விஷயத்திற்கு தலைவராக ஸ்டாலினும், அத்தீர்மானத்திற்கு கையொப்பமிட்டனர்.

"1917-ம் வருஷத்திலிருந்து இடைவிடாது அவர் செய்த சேவைகளுக்கு வேறு மனிதனாயிருந்திருந்தால் அசாத்திய கீர்த்தியடைந்திருப்பான்" என்று ஸ்டாலினைப்பற்றி பார்பூஸ் எழுதுகிறார். புரட்சியின் தருவாயில் தேசீய இனங்களின் கமிஸாராக வேண்டியது ஸ்டாலினுடைய பெரும் பொறுப்பாயிற்று. 'இதுவரை ஆண்டுவந்த ரஷ்ய தேசீய இனம். மற்றவளர்ச்சியடையாத தேசீய இனங்களின் பூர்ண சுதந்திரத்தை அங்கீகரித்து. அவர்கள் இஷ்டப்பட்டால் சோவியத் ஐக்ய குடியரசிலிருந்து பிரிந்துபோகும் உரிமையையும் ஒப்புக்கொள்ளவேண்டும். பரிபூர்ண சுதந்திரம் அளிக்கும் இந்த உரிமையைப் பெற்ற வளர்ச்சியடையாத தேசீய இனங்கள், இஷ்டத்துடன் ஒன்றுபட்டு ஐக்ய குடியரசில் சேருவதற்கும், இதுவரை ஆண்டுவந்த ரஷ்ய தேசீய இனத்துடன் ஒத்துழைக்கவும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காணவேண்டும்'. இக்கொள்கையை வகுத்தது

ஸ்டாலின்; இதை நடைமுறையில் கொண்டுவரும் கடமை யும் அவருடையதாயிற்று.

பின்லாந்துக்கு ஜார் அரசாங்கம் சுதந்திரம் மறுத்தது. சோவியத்சர்க்கார் முதல்வேலையாக அவர்களுக்கு சுதந்திரம் அளித்தனர். இச்செய்தியை பின்லாந்திற்குத் தெரிவிக்கச் சென்றவரும் ஸ்டாலின். "பல்வேறு தேசிய இனங்கள் ஸ்டாலினை நம்புவதைப்போல் வேறு யாரை நம்பும்!" என்றார் லெனின்.

ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் சமரச பேச்சுவார்த்தைகள் நடந்தன. அதுவே நெருக்கடி யான காலம். உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டு மென்பது லெனின் அபிப்ராயம். யாரும் அதை ஆரம்பத் தில் ஆதரிக்கவில்லை. ஸ்டாலின் மட்டும் உடன்படிக்கையின் அவசியத்தை உடனே உணர்ந்தார்; லெனினை ஆதரித்தார். அவ்வுடன்படிக்கை ரஷ்யாவிற்கு சாதகமில்லை என்பது வாஸ்தவம். ஆனால் அன்றைய நிலைமையில் அவகாசம் அத் யாவசியம். ஆகவே அதைப் பெறுவதற்கு அந்த ஒப்பந்தத் திற்கு கையொப்பமிடவேண்டுமென்பது தூரதிருஷ்டி படை த்த லெனின் திட்டம். அவகாசமின்றி நாட்டில் புனருத்தார ணம் செய்வது எப்படி! அன்றைய நிலைமையை லெனின் சுருக்கமாகச் சொன்னார் "ஓய்வு இல்லாவிடில் ஒழிந்தோம்" என்று.

1918-ல் தகர்க்கப்பட்ட ரயில்வேயை மறுபடியும் போடுவதற்கும் ஸ்டாலினைத்தான் வட காகஸஸுக்கு அனுப்பினார்கள். அந்த ரயில்வே யில்லாததினால் நகரங்க ளில் வசிக்கும் மக்களுக்கு கோதுமை வந்து சேரவில்லை; மக்கள் பட்டினி கிடக்க வேண்டியதாயிற்று. அங்கிருந்து ஸ்டாலின் லெனினுக்கு கடிதம் எழுதினார்.

"தோழரே, நான் யாரையும் ஓய்வெடுக்க விடவில்லை- நானும் ஓய்வு எடுத்துக்கொள்ளவில்லை. என்ன ஏற்பட்ட போதிலும் சரி, உங்களுக்கு கோதுமை வந்து சேருவதுமட்டும் நிச்சயம்."

1919-ம் வருஷம் ஸ்டாலின் தொழிலாளி-விவசாயி பரிசிலனை கமிஸார் ஆக்கப்பட்டார். சூழ்ச்சி, திறமையின்மை ஊழல் இவற்றை பரிசிலனையில் கண்டுபிடித்து கட்டுப்பாட்டை நிலைநாட்டுவது அவரது வேலை. இந்த வேலையைப் பற்றி "இது பிரம்மாண்டமான வேலை. அதிகாரமுள்ள ஒருவர்தான் இதைச் செய்ய முடியும், சாதாரண ஆட்கள் சின்னஞ்சிறு சூழ்சசிகளில் மூழ்கி அதிலேயே சிக்கிக் கொள்ள வேண்டியிருக்கும்" என்று லெனின் கூறுகிறார்.

இராணுவ நிபுணர்

ஸ்டாலினின் மஹத்வம், புரட்சி காலத்தில் உள்நாட்டுப் போரில் அவர் எடுத்துக்கொண்ட பங்கிலிருந்து நன்கு புலப்படும். 1918-லிருந்து 1920 வரை "எங்கெந்த முனைகளில் பெரும் ஆபத்து ஏற்பட்டதோ அங்கெல்லாம் ஸ்டாலின் ஒருவரைத்தான் மத்தியக் கமிட்டி அனுப்பிற்று" என்கிறார் காலினின்.

ஸ்டாலின் வரோஷிலாவுடன் ஜாரிட்சின் நகரைக் காத்தார். பெர்ம் நகரத்தை, ஸெர்ஷின்ஸ்கியுடன் பாதுகாத்தார்! யூதெனிச்சை பெட்ரோகிராடில் முறியடித்தார்; ஸ்மாலென்ஸ்கில் "வெள்ளை" முதலாளித்வ படை யெடுப்பாளரை எதிர்த்து விரட்டினர்; டெனிகினை தெற்கே ஓட்டினர். ஜிட்டோமீரில் முதல் காலாட்படையை போலிஷ் எதிர்ப்பிலிருந்து தப்புவித்தார், தெற்கே ரேங்கலை நசுக்கினர்; இவ்வளவும் இரண்டு வருஷங்களுக்குள் நடந்தவை.

ஜாரிட்சின் தற்காப்பைப்பற்றி காகனுவிச் எழுதிய

ருக்கிறார். அவர் ஸ்டாலினுடன் நெருங்கிக் கட்சி வேலை செய்தவர் ; சமாதான காலத்தில் ஸ்தாபன ரீதியான வேலைகளை வெகு திறமையாகச் செய்தவர். அவர் எழுதியதாவது :—' காலம் பயங்கரமானது. அப்பொழுது ஸ்டாலினைப் பார்த்திருக்க வேண்டும் ! எப்பொழுதும் சாந்தம் ; சிந்தனையிலே ஆழ்ந்திருப்பார் ; ஒரு நிமிஷங்கூட கண்ணை மூடுவதில்லை ; உண்மையாகவே தூக்கம் என்பதே கிடையாது ; சளையாத உழைப்பு ; ராணுவத் தலைமை காரியாலயத்திற்கும் போர்முனைக்கும் மாறி மாறி ஓய்வின்றி தன் நேரத்தைப் பிரித்துச் செலவழித்தார். போர்முனையில் நிலைமை பெரும் ஆபத்தாயிருந்தது , நமக்கு வேறு வழியில்லை : ஆனல் அது ஸ்டாலினின் மனதை மட்டும் கலக்கவில்லை , அவருக்கு ஒரே ஒரு எண்ணம்தான் : ஜெயிக்க வேண்டும். இந்த கலக்க முடியாத உறுதி அவருடன் வேலை செய்தவர்களிடையேயும் பரவிற்று. நிலைமை கைவிட வேண்டியதுதான், வேறு வழியே கிடையாது என்றிருந்தாலும் கூட, யாருக்குமே ஒரு விநாடிகூட வெற்றியைப்பற்றி சந்தேகம் ஏற்படவில்லை."

" அதே மாதிரி வெற்றியும் அடைந்தோம் ".

ஸ்டாலின் பேர்ம் போர்முனைக்குச் சென்ற தருணத்தில் அங்கிருந்த மூன்ருவது படை பீதியடைந்திருந்தது ; குடி மயக்கத்தில் கிடந்தது. கலைந்து போய்க் கொண்டிருந்தது. முன்னேறித் தாக்குவதற்கு ஸ்டாலின் அப்படையை ஒழுங்குபடுத்தினர். பால்டிக் கரையில் யுதெனிச் என்ற விரோதி தளகர்த்தன் தன் படையுடன் பெட்ரோகிராடிற்கு சில மைல்களுக்கு வந்து விட்டான். 20 தினங்கள்தான் ; ஸ்டாலின் தலைமையின் கீழ், வெகு மும்முரமான யுத்தம் ஆரம்பித்து விட்டது. இராணுவ வேலையையே தன் தொழிலாகக் கொள்ளாத, " அமெச்சூரா "யிருக்கும் ஸ்டாலின்

லெனினுக்கு பின் வருமாறு எழுதினர். "டிராஸ்னியா கார்காவை பிடித்தது கடல்யுத்த சாஸ்திரம் பூராவையும் பொய்யாக்கி விட்டதென்று கடல்யுத்த நிபுணர்கள் உறுதியாகக் கூறுகின்றனர் சாஸ்திரத்திற்கு மதிப்பு எனக்கு உண்டு என்ருலும்—இம்மாதிரியே இனிமேலும் செய்வேன் என்று நான் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன்!"

டெனிகின் மாஸ்கோவிற்கு பக்கத்தில் வந்து விட்டான். மாஸ்கோவிற்கு பெரிய ஆபத்து. இதுபோல எப்பொழுதுமே ஆக்ரமிப்பாளனிட மிருந்து அதற்கு ஆபத்தேற்பட்டதில்லே. மாஸ்கோவைக் காக்கும் பொறுப்பை ஸ்டாலினுக்கு மத்தியக் கமிட்டி கொடுத்தது. இதில் ட்ராட்ஸ்கி தலேயிடக் கூடாதென்பதை ஒரு நிபந்தனையாகக் கேட்டுக் கொண்டார் ஸ்டாலின். போர் திட்டத்தை மாற்றியமைத்தார். டான் நதி பிரதேசம் விரோதிகளான கோசாக்குகள் நிறைந்த பிரதேசம்; அதன் வழியே போவது என்பது முதலிலிருந்த திட்டம்; இது ட்ராட்ஸ்கி கூட்டத்தார் வகுத்த போர் தந்திரம். அதைவிட்டு டானெட்ஸ் பள்ளத்தாக்கின் வழியே போவதென ஸ்டாலின் திட்டம்போட்டார். ஏனென்ருல் அங்குள்ள சுரங்கத் தொழிலாளிகளும், பேக்டரித் தொழிலாளிகளும் விரோதியின் போக்குவரத்திற்கு ஒவ்வொரு அடிதூரத்திற்கும், முட்டுக்கட்டைகள் போடுவார்கள். முன்னேறிவரும் செஞ்சேனேயை வரவேற்பார்கள் என்று அவருக்குத் தெரியும். ஆகவே வெற்றியளிக்கும் இந்த ஒரே திட்டத்தினுல் டெனிகினே பின்னுல் தள்ளி, முடிவில் அவன் ராணுவத்தை முறியடிக்கவும் முடிந்தது.

ஸ்டாலினுக்கு இருமுறை ஆர்டர் ஆப் தி ரெட் பேனர் என்னும் பரிசு கிடைத்தது. முதல் பரிசில் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "அபாயகரமான நிலேமை. நான்கு பக்கத்திலும் விரோதிகள் வந்து சூழ்ந்து கொண்ட

னர். அங்கிலேமையில் பிரிஸிடியம் (சோவியத் தலைமைக் கமிட்டி) ஜே வி. ஸ்டாலினை அந்தப் போர்முனைக்கு அனுப்பிற்று. அவருடைய சளையா உழைப்பினாலும் அபார சக்தியாலும், கலக்கமடைந்த ரஷ்யத் துருப்புகளுக்கு ஊக்க மூட்டினார். சண்டை செய்யும் முன்னணியில், குண்டுகள் பொழியுமிடத்தில் நேரில் சென்று தன் தீர நடத்தையின் மூலம் சோஷியலிஸ்டுப் புரட்சிக்கு போர் புரிவோருக்கு உற்சாக மூட்டினார்," பரிசுகள் இரண்டு பெற்றது மட்டுமல்ல. 1920ம் வருஷத்திலிருந்து 1923 வரை யுத்த கவுன்சிலில் அங்கத்தினராகவும் இருந்தார்.

"உள்நாட்டுப் போரில் ஸ்டாலின் என்ன செய்தார். ஒன்றுமில்லை" என்று ஸ்டாலினின் விரோதிகள் கூறுவார்கள். சோஷியலிஸத்திற்கு விரோதிகளாய் இருப்பவர்களும் அப்படித்தான் சொல்வார்கள். ஸ்டாலின் இராணுவத் துறையில் அக்காலத்தில் எவ்வளவு அதிசயங்களைச் செய்தார் என்பதை ஒப்புக்கொள்வதில்லை. அவருடைய பெரிய ராணுவ வெற்றிகளைக் குறைத்துக் கூறுவார்கள். இப்படித் தூற்றித் திரியும் ஆட்களுக்கு தற்கால அனுபவம் சரியானபதில். எவ்வளவு தீரத்துடனும் சகிப்புத் தன்மையுடனும், தோழர் ஸ்டாலின் இன்று நடக்கும் யுத்தத்தை நடத்துகிறார். உடனுக்குடனே சரியான முடிவெடுக்கும் திறமை. உலகம் பிரமிக்கும் இராணுவ தந்திரம். அதில் ஆச்சரியக்கத் தக்க நிபுணத்வம்! அதனால்தான் நவம்பர் 8–ந் தேதி 1941-ம் வருஷம் மிஸ்டர் சர்ச்சில் "அந்த மகாப் பெரிய போர்வீரர் ஸ்டாலின்" என்று அழைத்தார். ஸ்டாலின் இன்று காண்பிக்கும் இராணுவத் திறமையே அன்று அவர் ராணுவத் துறையில் எவ்வளவு பெரும் பங்கு எடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டு. வேறு ஆதாரங்கள் வேண்டியதில்லை. அவதூறுகளை இன்றைய நிகழ்ச்சிகளே பொய்ப்பிக்கின்றன.

1921-ம் வருஷம் ஸ்டாலின் கொஞ்சகாலம் வியாதியாயிருந்தார். 1922-ல் லெனின் நோயால் கஷ்டப்பட்டார். இக்காலங்களில் இருவருக்கும் நட்பு அதிகரித்தது. 1922-ம் வருஷம் ஸ்டாலின் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். இதிலிருந்து பொதுஜன நலன் விலை மதிக்க முடியாத அவரது வேலையைப் பொறுத்திருந்தது. அவருடைய திறமையில் பொதுமக்களுக்கு அசாத்ய நம்பிக்கை இருந்தது- அதே வருஷம் டிசம்பர் மாதத்தில் ஐக்கிய சோவியத் சோஷியலிஸ்டுக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்டாலின் தேசிய இனங்களின் கமிஸார் ஆனார். சோவியத் அரசியல் அமைப்பை வகுப்பதில் முக்ய பொறுப்பு அவருடையதாயிற்று.

1924-ம் வருஷம் லெனின் இறந்தார். இரண்டாவது காங்கிரஸின் லெனின் ஞாபகார்த்தக் கூட்டத்தில் ஸ்டாலின் கீழ்கண்டவாறு பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார். "கட்சி அங்கத்தினர் என்ற பட்டத்தின் கவுரவத்தை உயர்த்துவேன். பரிசுத்தமாக வைத்திருப்பேன். கட்சியின் ஒற்றுமையை காப்பேன். "தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை" பாதுகாத்து பலப்படுத்துவேன். தொழிலாளர் விவசாயிகள் உறவை உறுதிப்படுத்துவேன். சோவியத் குடியரசை ஸ்திரப்படுத்துவேன் செஞ்சேனையையும் செங்கடற்படையையும் பலப்படுத்துவேன். கம்யூனிஸ்டு இன்டர் நேஷனல் கொள்கையின்படி பிசகாது நடப்பேன்."

"லெனினிஸத்தின் அடிப்படைகள்" என்று அதே வருஷம் ஸ்டாலின் பல பிரசங்கங்கள் செய்தார். லெனின் சொன்னவற்றின் கொள்கைகளை வளர்ந்துவரும் வாலிபர்களுக்கு ஸ்டாலின் எடுத்துச் சொன்னார். இருந்தாலும் இதை சொன்ன உடனேயே அடிப்படையான அபிப்பிராய வித்யாஸங்கள் கிளம்பின. பல பெரிய ஆட்கள் என்று கருதப்

பட்டு வந்தவர்கள் லெனினிஸத்திற்கு வேறுபட்ட அபிப்ரா யங்களைக் கொண்டிருந்தனர் என்பது தெரியவந்தது. இவர் கள் ஸ்திரமாக கட்சியிலிருந்ததில்லை. உதாரணமாக ட்ராட்ஸ்கி, கொஞ்சகாலம்தான் கட்சி அங்கத்தினராயிருந்தி ருக்கிறார். இவர்களெல்லாம் கூடி ஒரு எதிர்ப்பு ஏற்படுத்தி னார்கள். அந்த எதிர்ப்பின் வேலை, குறை கூறுவதே.

எதிர்ப்பில் இரண்டு பிரிவுகள் இருந்தன. இடதுசாரி, வலதுசாரி என்று. இருசாரிக்கும் ஒன்று மட்டும் பொது. அடிப்படையாக அவர்களுக்கு புரட்சியில் நம்பிக்கையில்லை. ஜனங்களின் சக்தியில் நம்பிக்கை கிடையாது. தொழிலாளி வர்க்கம் என்னென்ன சாதிக்க முடியும் என்பதை உணரா வர்கள். ஒரே தேசமானாலும்கூட அங்கு சோஷியலிஸத்தை ஸ்தாபிக்க முடியும் என்று ஸ்டாலின் அபிப்ராயப்பட்டார். இதுவே லெனினின் அபிப்ராயமும். ஒரு நாட்டில் சோஷிய லிஸம் முடிவாக நிலைநிற்க வேண்டுமானால் உலகம் பூரா வும் சோஷியலிஸம் வரவேண்டும் என்பது வாஸ்தவம். ஆனால் உடனடி வேலை என்ன? எந்தப் பகுதியில் தொழி லாளிவர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டதோ அங்கு சோஷயலிஸ சமுதாயத்தைக் கட்டுவதே. இவ்விஷயத்தில் எதிர்ப்பாளிகளின் அபிப்ராயம் வேறு. உலகத்தின் இதர பாகங்களில் முதலாளித்வம் இருக்கும்வரை ஒருநாட்டில் சோஷியலிஸம் பிழைக்காது, தோல்வியடையும். அழிந்து போகும் என்பது எதிர்ப்பின் இடதுசாரியும் வலதுசாரியும் கொண்டிருந்த அபிப்ராயங்கள். காரணம் வேறுபட்டவை. உலக முழுதும் முதலாளித்வத்தை நாசம் செய்யும்வரை, ஒரு நாட்டில் சோஷியலிஸம் கட்டுவது நம் உழைப்பை வீணாக்கு வதாகும் இது இடதுசாரியின் வாதம். மற்றநாடுகளில் முதலாளித்வத்தை ஒழித்துக் கட்டமுடியாது. அதனால் இங்கு அடைந்துள்ள சோவியத் முறையையும் விட்டுவிடு

வோம். முதலாளித்வத்திற்கு சரணடைய வேண்டியதுதான். இது வலதுசாரியின் போக்கு.

இடது சாரிக்குத் தலைவர்கள் பொதுவாக ட்ராட்ஸ்கி, ஜினேவீவ், காமினேவ். வலதுசாரிக்காரர்கள், ரிகாவ், புகாரின், டாம்ஸ்கி. ஆனால் இவர்களுடைய பொதுவான குணம் நம்பிக்கையின்மை, முடிவான அபிப்ராயமில்லா திருத்தல், இப்பொழுது ஒன்று அடுத்த நிமிஷம் வேறு என்று உறுதியின்றி ஊசலாடும் கூட்டம். திட்டமான கொள்கையும், நம்பிக்கையும் இல்லாதது இருசாரிக்கும் சில சமயங்களில் இருந்த சிற்சில வித்யாஸங்களையும் மறைத்து அவர்களை ஒன்றுபடுத்திற்று.

இந்த எதிர்ப்பு லெனின் இறந்தபிறகுதான் கிளம்பிற்று என்று சிலர் நினைக்கின்றனர். அது தவறு. அதற்கு முன்னமேயே எழுந்த எண்ணற்ற பிரச்னைகளில் இவ்வடிப்படையான வேறுபாடு காணப்பட்டது. உதாரணத்திற்கு ட்ராட்ஸ்கி போல்ஷவிக் கட்சியில் எப்பொழுது சரியான அங்கத்தினரானார்? 1917-ம் வருஷம்தான். லெனின் காலத்தில் அவருடைய கொள்கையை நடக்காதவையென்றும், வெறுக்கத்தக்கதென்றும் கண்டிப்பதில் தன்னுடைய முழுத்திறமையையும், சாதுர்யத்தையும் காண்பித்தார். அதேபோலத்தான் அவருக்குப் பிறகு ஸ்டாலினின் கொள்கையையும், கட்சியின் திட்டங்களையும் கண்டித்து வந்தார். ஜினேவீவும், காமினேவும்தான் அக்டோபர் மாதப் புரட்சி தோல்வியடையும் என்று எண்ணினார்கள். இந்த அவநம்பிக்கையால் தூண்டப்பட்டு தற்காலிக சர்க்காருக்கு இப்புரட்சித் திட்டத்தை முன்கூட்டியே வெளிப்படுத்தி விட்டார்கள். இவர்கள்தான்—இடது, வலதுசாரிக்காரர்கள் – பிரஸ்ட் - லிடாவ்ஸ்க் ஒப்பந்தத்தை எதிர்த்தார்கள். சோவியத் மக்களின் சக்தியில் நம்பிக்கையில்லை. அதனால் அன்று சோவியத்

திற்கு பாதகமான ஒப்பந்தமா யிருந்தபோதிலும் மக்களின் பலத்தைக்கொண்டு அதை சமாளிக்க முடியுமென்பதை நம்பவில்லை.

அந்த ஒப்பந்தம் ஒரு பிரம்மாண்டமான விபத்து என்று எண்ணினர்கள். அதற்கு அவர்கள் செய்த காரியம் ஒவ்வொன்றும் அதை வெட்டவெளிச்சமாக்குகிறது. விரோதியுடன் சதிசெய்தார்கள். லெனினைப் பிடிப்பதும் அதில் ஒன்று. பிடித்து அவசியமானல் அவரை "ஒரு வழி"யாக முடித்துவிடுவது; தங்களுடைய 'சமரச'த் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது. இவ்வாறெல்லாம் திட்டம் போட்டார்கள். 1920-ம் வருஷம் சோவியத் முழுதும் மின் சார மயமாக்குவதென்று திட்டமிடப்பட்டது. ட்ராட்ஸ்கிக்கு தொழிலாள வர்க்கத்தில் எள்ளளவும் நம்பிக்கையில்லையென்றே சொல்லவேண்டும். இல்லாவிடில் தொழிற்சங்கங்களை கட்டாயப்படுத்த நினைப்பாரா? ராணுவக் கட்டுப்பாட்டில் அவர்களை வைக்கவேண்டுமென்று பிரேரேபிப்பாரா?

நவயுக சிற்பி

இருபக்கங்களிலும் இருந்து வந்த இந்த ஆபத்திலிருந்து பத்திரமாக நாட்டை நடத்திச் செல்லும் பொறுப்பு ஸ்டாலினுடையதாயிற்று. தானும் இருபக்கங்களிலும் சிக்காமல் சரியான பாதையில் போகும் கடமை அவருடையதாயிற்று. இக்கடமையை இவர் செய்யத் தவறியிருந்தால் சரித்திரத்திலேயே பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். கிராவைக் கொன்றவர்களும் இவ்வெதிர்ப்புக்காரர்கள்தான். கொல்லப்படுவதற்கு முன் 1933-ல் அவர் கூறியதாவது:—

"ஸ்டாலினின் அளவு கடந்த திறமையை உணர்வதே கஷ்டம். லெனின் இறந்தபிறகு ஸ்டாலினின்றி புதிய திட்டங்களோ, ஸ்லோகங்களோ கிடையாது. எல்லாவற்றிற்கும்

அவர்தான் மூலகர்த்தாவா யிருப்பார். எங்கள் உழைப்பில் பெரிய அபிவிருத்திகள் இருந்தால் அதற்கும் காரணம் அவ ராய்த்தானிருப்பார். முக்கியமான எல்லா வேலைகளுக்கு வழிகாட்டுபவரும் அவரே. எல்லாவித பிரதான சர்வதேசப் பிரச்னைகளில் அவருடைய சிபார்சுகளை ஒட்டியே முடிவுகள் எடுக்கப்படும். முக்யமான விஷயங்களில்தான் அக்கரை செலுத்துவார் என்பதல்ல. தொழிலாளி, விவசாயிகளை பொதுவாக எல்லா பாட்டாளிகளையும் பாதிக்கும் சின்னஞ் சிறு விஷயங்கள் ஆனாலும்சரி, எதுவானாலும்சரி அவற்றில் அவருக்கு சிரத்தையுண்டு.

விவசாய நாடாயிருந்த ரஷ்யநாட்டை தொழிற்சாலை கள் நிறைந்த நாடாக ஆக்குவதே 1935-ம் வருஷத்தில் முக் யமான வேலையாயிருந்தது. சோவியத் பிரதேசத்தில் சோஷி யலிஸம் நிர்ணயம் செய்யமுடியும் என்று லெனினைப் போலவே ஸ்டாலினும் அபிப்பிராயங் கொண்டிருந்தார். "நிர்மாண வேலைகளில் அபிவிருத்திக்கு நிச்சயமான அறி குறிகள் இல்லாமல் சோஷியலிஸம் நிர்மாணம் செய்வோம் என்ற உறுதி இல்லாமல் பாட்டாளி மக்கள் உணவுபூர்வ மாக நிர்மாண வேலையில் பங்கெடுத்துக்கொள்ள முடி யாது. இதை கவனத்தில் கொள்ளாவிடில் சோஷிய லிஸத்தை நிர்மாணிப்பது முடியாத காரியம்.

"சோஷியலிஸத்தை நிர்மாணிப்போம் என்ற உறுதி யில்லாதபோது, அதை நிர்மாணிக்க எங்கிருந்து மனம்வரும்! வேலை முடிவுபெறாது என்று தெரிந்தால் எவன்தான் அந்த வேலையில் இறங்குவான்?"

இது மற்ற நாட்டுத் தொழிலாளர் இயக்கத்திற்கு துரோ கம் செய்தது ஆகாது. அதற்குமாறாக அவர்களுக்கு சிறந்த உதாரணமாக விளங்கும். அவர்களுக்கு நம்பிக்கை யூட்டும். "ஐக்ய சோஷியலிஸ்டு சோவியத் குடியர

சில் சோஷியலிஸ நிர்மாணம் உலகத் தொழிலாளர்களின் பொதுநலத்திற்கே ஆதரவளிக்கும். முதலாளித்வத்தின் மீது முடிவான வெற்றியும் பெறும். சோவியத்தில் மட்டுமல்ல. எல்லா நாடுகளிலும்". (14-வது கட்சிக் காங்கிரஸில் செய்த பிரசங்கம்) சோவியத்தில் தொழில் அபிவிருத்தியின் அவசியத்தைப்பற்றி ஸ்டாலினின் வாதம் பின்வருமாறு:—முதலாளித்வநாடுகள் நம்மை சுற்றி வளைத்திருக்கின்றன. முதலாளித்வ நாடுகளுக்கிடையே இருந்துகொண்டுதான் நாம் வேலைசெய்கிறோம்; புது சமூகத்தைக் கட்டிவருகிறோம். இதிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. அதாவது நமது பொருளாதார அமைப்பைக் கட்டுவதில் ஒரு விஷயத்தில் உஷாராயிருக்கவேண்டும். உலக முதலாளித்வத்தின் மீது சார்ந்திருக்கும் பொருளாதார அமைப்பாயிருக்கக்கூடாது நம் நாட்டின் பொருளாதாரம். அதையொட்டி வாழவேண்டுமென்ற நிலைமையை விட்டுவைக்கக் கூடாது.

"உலக முதலாளித்வத்தின் ஒரு பகுதியாய் நம் அமைப்பு வளரக்கூடாது. சுயேச்சையான பொருளாதார அமைப்பாயிருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் உள்நாட்டு மார்க்கெட்டையே பொறுத்திருக்கவேண்டும். உள்நாட்டு மார்க்கெட்டு தொழிற்சாலைக்கும் விவசாயத்திற்கும் உள்ள உறவைப் பொறுத்திருக்கிறது". (14-வது கட்சி காங்கிரஸில் செய்த பிரசங்கம்).

எதிர்ப்பாளர்கள் இது கைகூடும் விஷயமென்று கருதவில்லை. ஆதலால் இதற்கு நேர்மாறான முடிவிற்கே வந்தார்கள்; ஐக்ய சோஷியலிஸ்டு சோவியத் குடியரசு தொழிலபிவிருத்தியடைய முடியாது. விவசாய நாடாகத்தானிருக்க முடியும். மிஷின் உற்பத்திப் பொருள்களுக்கு வெளிநாட்டு முதலாளித்வ நாடுகளை நம்பியே யிருக்கவேண்டும். அவை

களை வாங்குவதற்கு கடன் வாங்குவதிலும் அவர்களைத் தாங்க வேண்டும். பச்சையாகச் சொன்னால் ஒருவித அடிமை நாட்டு அந்தஸ்து. முதலாளித்வ முறைகளுக்குத் திரும்பிப் போவதே.

ஸ்டாலின் திட்டத்திற்கு கட்சி மகாநாடுகளிலும், காங்கிரஸிலும் அமோகமான ஆதரவு கிடைத்தது. ஆனால் அத் திட்டத்திற்காக கொஞ்சம் கஷ்டத்தை சகித்துக்கொள்ள வேண்டிவரும். தங்களுடைய முயற்சியைக் கொண்டே தேசத்தின் பணத்தேவைகளை பூர்த்தி செய்யவேண்டிவரும். மூலதனத்தை உள்நாட்டுப் பொருளாதாரத்தி லிருந்தே சேர்க்க வேண்டிவரும். உள்நாட்டு உற்பத்தியில் மிச்சம் பிடிக்கவேண்டும். அதாவது என்ன? தற்காலிகமாக ஜனங்களின் தேவைக் கவசியமான பொருளின் உற்பத்தியைக் குறைக்கும். இயந்திர சாதன வளர்ச்சிக்கு மூலதனத்தைச் செலவிட வேண்டும். இதனால் எதிர்காலத்தில் உபயோகப் பொருள்கள் யதேஷ்டமாகும். இவ்வளவு கஷ்டத்திற்கும் தயாரென்றனர் மற்றகட்சி அங்கத்தினர்கள். தீரயோசித்தே இம்முடிவுக்கு வந்தனர். நாட்டின் சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் அவை அத்யாவசியமாயிருக்கிற தென்றால் அதை ஆதரிக்க வேண்டியதுதானே. அதில் கஷ்டத்தைப் பார்க்க முடியுமா!

தொழிற்திட்டம் வெற்றியடைந்தது. உள்நாட்டுக் கலகம் நாட்டை அழித்ததல்லவா, அப்பொழுது தற்காலிகமாக "யுத்த கம்யூனிஸம்" அனுஷ்டானத்திலிருந்தது. அழிவு நின்றவுடன் "புது பொருளாதாரத் திட்டம்" யுத்த கம்யூனிஸத்திற்கு பதிலாக ஆரம்பிக்கப்பட்டது. இது லெனின் திட்டம். நிர்மாணத்திற்கு அவசியமானதொன்றையும் விட்டு வைக்கவில்லை. அரசாங்கத்தால் தொழில் ஸ்தாபனங்கள்

ஆரம்பிக்கப்பட்டன. அதே சமயத்தில் சிறு முதலாளித்வ தொழில் ஸ்தாபனங்கள், வியாபார ஸ்தாபனங்கள் அனுமதிக்கப்பட்டன. எவ்வளவு உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வளவும் அன்று வேண்டியிருந்தது. பூராப் பொறுப்பையும் சர்க்காரே எடுத்துக்கொள்ளுமளவிற்கு சோவியத் அன்று சக்தி பெறவில்லை. உற்பத்தி ஸ்தாபனங்களுக்கும் பயிற்சிபெற்ற ஆட்கள் வேண்டும். அவர்கள் எண்ணிக்கையும் அன்று மிக சொற்பம். அதுவுமின்றி அன்றைய உற்பத்தி பூராவும் சர்க்காரால் நிர்வகிக்கும்வரை காத்துக் கொண்டிருக்கும் நிலைமையுமல்ல. 1925, 29 க்குமிடையே பல தொழிற்சாலைகள் தோன்றின. தற்காலிகமாகவிருந்த தனிப்பட்ட வியாபார தொழில் ஸ்தாபனங்கள் மறைந்தன. நாடுமுழுவதற்கும் ஒரே பொருளாதாரத் திட்டமிடுவது சாத்யமாயிற்று—இதுவே பேர்போன ஐந்துவருஷத் திட்டம்.

இதை வெளிநாடுகளில் வீணெண்ணமென்று நினைத்தனர். ஆனால் ஐந்துவருஷத் திட்டம் நான்கு வருடத்திலேயே பூர்த்தியாய் விட்டது. அதில் தோன்றின தொழிற்சாலைகள் ஒரே மூச்சில் நாட்டை அடிமை நிலையிலிருந்து சுதந்திரத்திற்கு மாற்றின. இரண்டாவது ஐந்துவருஷத் திட்டம் இதைத் தொடர்ந்து வருகிறது. இதில் இன்னும் அநேக தொழிற்சாலைகள் கட்டப்படுகின்றன. இதில் தொழிற்சாலைகள் அபிவிருத்தியாயின என்பது மட்டுமல்ல. ஜனங்கள் உபயோகப் பொருள் உற்பத்தி அதிகரிப்பிலும் அதனுடனே கவனம் செலுத்த முடிந்தது. வாழ்க்கைவசதித் திட்டத்தையும் உயர்த்த முடிந்தது.

நாட்டின் முன்னேற்றத்திற்கு, தொழிற்சாலைகளபிவிருத்திமட்டுமல்லாமல் வேறொரு நிலைமையும்அத்யாவசியமாயிருந்தது. கிராமப்பிரதேசமளித்த காட்சி வளர்ச்சியடையாத நாட்டுப்புறங்கள். ஒவ்வொரு விவசாயிக்கும் உள்ளங்கை

யளவு நிலம். இதில் விவசாயத்திற்கு இயந்திரங்களைப் புகுத்துவது எப்படி? ஆகவே கிராமங்களிலும் பெரும் மாறுதல்கள் அவசியமாயிருந்தன. கிராமங்களில் மூன்றுதரப் பட்டவர்கள் இருந்தனர். ஏழை விவசாயிகள் ஒரு கூட்டம். அவர்களுக்கு சொந்தமாகவுள்ள பூமியோ ஒரு கை அகலம். அதைக்கொண்டு ஜீவிக்க முடியாது. அதனால் வேறுநிலங்களுக்குக் கூலிவேலைக்குப் போனால்தான் வயிற்றுப் பிழைப்பு நடக்கும். அடுத்தபடியாக மத்திய விவசாயிகள்; பணக்கார விவசாயிகள் மற்றொரு கூட்டம். இவர்களை 'குலக்கு'கள் என்று அழைப்பதுண்டு. இவர்களுக்கு அதிக நிலம். அதை உழுது பயிரிடுவது என்பது அவர்களுக்கு சாத்யமில்லை. கூலிக்கு ஆள் வைத்துத்தான் ஆகவேண்டும். அதற்கு ஆள் கிடைக்கவேண்டுமானால் நூற்றுக்கணக்கில் ஏழை விவசாயிகள் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்க வேண்டும். இந்தப் பிரிவினைகளையெல்லாம் அகற்றி சுரண்டப்படுபவர்களும் சுரண்டுபவர்களும் போய் ஒரே கூட்டமாகவேண்டும். ஒன்றாக உழைக்கவேண்டும். இயந்திரங்களை புகுத்துவதற்கும், இரண்டு பிரிவுகளை ஒன்றாக்குவதற்கும் 'கூட்டுப்பண்ணை' முறை அமுலுக்கு வரவேண்டும். தனித்தனியாகப் பயிரிட்டுவந்த விவசாயி இம்முறை வந்த பிறகுதான் கூட்டுமுறையில் பயிரிடுபவனாகிறான்.

1927-ம் வருஷம் நடந்த 15-வது கட்சி காங்கிரஸிற்கு முன் ஸ்டாலின் கொண்டுவந்த திட்டமிது. எப்பொழுதும் போல் பலதரப்பட்ட எதிர்ப்பாளர்கள் இதையும் எதிர்த்தார்கள். யுத்தத்திற்கு முன்பு இருந்த அளவிற்கு வெள்ளாமை வந்துவிட்டது. ஆனால் விற்பனைக்குக் கிடைப்பதெல்லாம் வெள்ளாமையில் 35 சத விகிதமே. இதற்கு ஏதாவது செய்துதானாகவேண்டும். வலது இடதுசாரிக்காரர்கள் சுபாவம் தெரிந்ததுதானே? "விவசாயிகளை நெருக்குங்கள்"

என்று இடதுசாரிக்காரர்கள் கத்தினார்கள். ஏழை விவசாயிகளை மத்திய விவசாயிகளுக்கும் 'குலக்கு'களுக்கும் விரோதமாகக் கிளப்பிவிட வேண்டுமென்று வாதாடினார்கள். வலதுசாரிக்காரர்கள் இன்னும் விநோதமான யோசனை கூறினார்கள். பணம்படைத்த விவசாயிகள்தான் செழிக்கிறார்கள். ஆகவே வெள்ளாமை செழிக்க அவர்களை இன்னும் செல்வந்தர்களாக்கவேண்டும். இம்முறையில் விவசாயம் பூராவும் தனிப்பட்ட செல்வந்தர்களான விவசாயிகளைப் பொறுத்து இருப்பதற்கு யோசனை கொண்டுவந்தார்கள். அதாவது அந்த குலக்குகளின் கையில் சோவியத்யூனியனின் உணவு அஸ்திவாரத்தை ஒப்படைப்பது. முதலாளித்வத்தை மறைமுகமாகப் புகுத்தும் வழியே இது!

கூட்டுப் பண்ணையினால் பலன்பெறும் எல்லாத் தொகுதியினரையும் ஒன்றுபடுத்துவதே ஸ்டாலின் திட்டம். அதனால் ஏற்படும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களை ஒன்றுகூட்ட முடியும். ஆகவே ஸ்டாலின் திட்டம் விவசாயிகளில் பெரும்பாலோரை அணைத்தொன்று— ஏழை விவசாயிகள், மத்திய விவசாயிகள் எல்லோரையும் கூட்டியது. இத்திட்டத்தை நிறைவேற்ற பொறுமை வேண்டும். ஏனெனில் இத்திட்டத்தின் வெற்றி தொழிற்சாலைகளில் விவசாய இயந்திரங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் உற்பத்தியாகின்றன என்பதைப் பொருத்திருக்கிறது. இயந்திரங்கள் மட்டுமல்ல, கூட்டுப்பண்ணைக்கு அவசியமான மெஷின் உற்பத்தி எல்லாம் இம்முறையில்தான். இத்திட்டம் 1929-ம் வருடம் வரை தேங்கி நின்றது. 1929-ல் வேண்டியளவிற்கு தொழில் அபிவிருத்தியடைந்தது. இதைத் தொடர்ந்து 1933 வரை கூட்டுப்பண்ணை முறைக்கு போராட்டங்கள் நடந்தன. உக்ரம் நிறைந்தவை. கொடிய போராட்டங்கள். இவை

10 வருஷங்களுக்கு முன் நடந்த புரட்சிப் போராட்டங்களுக்கு எவ்வகையிலும் குறைந்தனவல்ல.

குலக்குகள் அல்லது பணக்கார விவசாயிகள் கூட்டுப் பண்ணையை எதிர்த்ததில் என்ன ஆச்சரியம்! எதிர்க்கத்தான் செய்வார்கள். கூட்டுப்பண்ணையில் ஏழை விவசாயிகள் கூடினர். அவர்களுக்கு அதிலேயே எல்லாம் கிடைக்கிறது. வெளியில் எதற்கும் எவரையும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. இம்முறையில் ஏழை விவசாயி மறைந்தான். குலக்குகளுடைய பிரம்மாண்டமான நிலங்களின் செல்வத்தைப்பெருக்க கூலிக்கு அமர்த்தப்பட்ட ஏழை விவசாயி கிராமத்தில் இல்லாதுபோனன். அதனல் குலக்குகள் கூட்டுப் பண்ணையை எதிர்த்து நாசவேலைகள் செய்தனர். கூட்டுப் பண்ணைக்காரரை வழிப்பறிசெய்தனர். கூட்டுப்பண்ணைச் சொத்தை எரித்தனர். தானியக் களஞ்சியங்களை அழித்தனர். நல்ல நிலங்களைப் பயிர்செய்யாமல் தரிசாக வைத்திருந்தனர். விவசாய உற்பத்தி பெரும்பாலும் அவர்களைப் பொருத்தே இருந்ததல்லவா? அதனல் கொஞ்சகாலத்திற்குப் பஞ்சம் ஏற்பட்டது. பட்டினி மக்களை வதைத்தது. நாடெங்கும் போராட்டங்கள். உள்நாட்டுக் கலகத்திற்குப் பிறகு இதுமாதிரி பார்த்ததேயில்லை.

இவ்வளவு இருந்தபோதிலும் 1933-ம் வருஷம் கூட்டுப் பண்ணை முறை வெற்றி பெற்றது. குலக்குகள் மறைந்தனர். அதோடு "முதலாளித்வ நாடுகளின் கடைசிக் கனவையும் மண்தின்றது. சோவியத்தில் மறுபடியும் முதலாளித்வத்தை உயிர்ப்பிக்கலாமென்று மனப்பால் குடித்துவந்தவர்கள், முதலாளித்வ நிலத்திற்கு ஏழை விவசாயிகளை எருவாகக் கருதினர்கள். ஏழை விவசாயிகளோ அவர்களை விட்டு ஒரே கூட்டமாகக் கூட்டுப்பண்ணையில் சேருகின்றனர். தனிச் சொத்தின் கீழ் அடிமையைவிடுத்து கூட்டு உற்பத்திக்கு

சுதந்திரத்துடன் சேருகின்றனர். முதலாளித்வத்தின் கடைசி நம்பிக்கையும் தவிடுபொடியாகிறது.'' இதுவே ஸ்டாலின் கூறியது.

இயந்திர வளர்ச்சி

1933-ம் வருஷத்திற்குள் விவசாயநாடாயிருந்த சோவியத் யூனியன் யந்திரத் தொழில் வளர்ச்சி பெற்ற நாடாய் மாறிற்று. கூட்டுப் பண்ணை செழித்தது. வேலையில்லாத் திண்டாட்டம் இருந்த இடம் தெரியாமல் போயிற்று. சோஷியலிஸ்ட்டு உற்பத்திமுறை நிலை நின்றது. முதலாளித்வமுறை ஒழிந்தது. மனிதன் உணவை மனிதன் பறிக்கும் பழக்கம் நின்றது. ஒரு மனிதனை வேலைக்கு அமர்த்தி அவன் உழைப்பின் பலனை அபகரிக்கும் பழக்கம் மறைந்தது.

வாழ்க்கைத்திட்டம் விரைவில் விடாது உயருவதற்கு வழி ஏற்பட்டது. ''வாழ்க்கை இனி இன்பம்தான்'' என்று ஸ்டாலின் கூறும் நிலைமையை உண்டாக்கிற்று. இதில் இன்னுமொரு விஷயத்தை ஸ்டாலின் சுட்டிக்காட்டினர். ''பலஹீனமாயிருந்த சோவியத் யூனியன்—தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளக்கூட பலமில்லாதிருந்த சோவியத் யூனியன்—இவற்றின் பலனுய் இன்று பலமான பாதுகாப்புள்ள நாடாயிருக்கிறது. தேசப்பாதுகாப்பிற்குத் தேவையான நவீன தளவாடங்களை ஆயிரக்கணக்கில் செய்து குவிக்கும் நாடாய் விளங்குகிறது. ஆக்ரமிப்பு ஏற்பட்டால் அதன் ராணுவத்திற்குப் போதியளவிற்கு தளவாடம் கொடுக்கும் நிலைமையிலிருக்கிறது'' என்ருர் ஸ்டாலின்.

இந்தப்பலன் அவர்களுக்கு மட்டுமல்ல; மனித சமுதாயம் முழுமைக்கும் பயன். இதை சரித்திரம் இன்று நிரூபிக்கிறது. இவ்வுண்மையை நடைமுறையில் காண்பதற்கு வெகு காலம் எடுக்கவில்லை.

சென்ற பத்து வருஷங்களில் சோவியத் பொருளாதார அமைப்பில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. இதை ஒரு அற்புதம் என்றே சொல்லவேண்டும். சோவியத் மக்களின் பொருளாதார வாழ்க்கை மாறியது மட்டுமல்ல. இந்த அஸ்தி வாரத்தின்பேரில் இதன் பலனுக வாழ்க்கைக் கதவும் திறந்தது. மக்கள் வாழ்க்கை முறையிலும் அற்புத மாறுதல்கள் ஏற்பட்டன. சோவியத்தில் மக்கள் புதுமலர்ச்சி பெற்றனர்.

இவைகளுக்கெல்லாம் ஸ்டாலின்தான் வழிகாட்டியாயிருந்தார். மாறுதலுக்குப்பின் மாறுதலாக அபிவிருத்தி ஏற்பட்டுவந்தது. 1931-ல் ஸ்டாலின் "முன்னேற்றமடைந்த பல முதலாளித்வ நாடுகளுக்கும் நாம் இன்னும் 50 அல்லது 100 வருஷங்கள் பின் தங்கியே இருக்கிருேம். இந்த வித்யாசத்தை நாம் 10 வருடகாலத்திற்குள் சரிசெய்தாகவேண்டும். இதை நாம் அடையாவிட்டால், அந்த நாடுகளால் நாம் அடக்கப்படுவோம்" என்று கூறியிருக்கின்ருர். (இதைக் காட்டிலும் திட்டமான ஒரு முடிவை எப்போதாவது எந்த ஒரு அரசியல் வாதியாவது செய்திருக்கிருரா?) இதை எதனுல் சாத்யமாக்க முடியும்?

அதுவரைக்கும் போல்ஷ்விக்கர்கள் அரசியல் துறையில்தான் தலைமையாக விளங்கினர். ஆனல் பொருளாதார நுட்பங்களைப் பொறுத்தவரையில், அவர்கள், பழைய (ஜார் காலத்திய) நிபுணர்களையோ, அல்லது வெளிநாடுகளிலிருந்து வரவழைத்த டெக்னிஷியன்களையோ (நிபுணர்களையோ) தான் நம்பியிருந்தனர். இனிமேல் அம்மாதிரியிருக்கமுடியாது. இப்பொழுது போல்ஷ்விக்கர்கள் நிபுணத்வம் பெறவேண்டும். போல்ஷ்விக்கர்கள் தாங்களே நிபுணர்களாக முன்வரவேண்டிய காலமிது. புணருத்தாரணம் செய்யும் காலத்தில் டெக்னிக் (விஞ்ஞான நிபுணத்வம்) தான் எல்லாவற்றையும் முடிவுகட்டுகின்றது. "அதைச் செய்ய

முடியும். போல்ஷ்விக்கர்கள் கைப்பற்ற முடியாத கோட்டைகள் எதுவுமே கிடையாது. மிகக் கடினமான பல பிரச்னைகளை யெல்லாம் நாம் தீர்த்துவைத்திருக்கின்றோம். இனி நாம் செய்யவேண்டிய காரியங்கள் அதிகமில்லை. டெக்னிக்கைக் கற்கவேண்டும். விஞ்ஞான சாஸ்திரத்தில் தேர்ச்சி பெறவேண்டும். இதை நாம் செய்துவிட்டோமே யானால், இன்றையதினம் நாம் கனவுகாணக்கூட முடியாத அளவிற்கு அபிவிருத்தியடைய முடியும். நாம் செய்யவேண்டு மென்று நினைத்தால், நிச்சயமாக இதைச் செய்யமுடியும்."

ஸ்டாலினின் இந்த வார்த்தை, வார்த்தையளவிலல்ல. காரியத்தில் செய்தும் முடித்தார்கள். 1935-க்குள் உற்பத்தி முறைகளில் நிபுணத்வமும் பெற்றனர். அபிவிருத்தியும் கிடைத்தது. நாளுக்குநாள் அபிவிருத்தி; அதுமட்டுமல்ல; நினைக்கமுடியாத வேகத்தில் அபிவிருத்தியேற்பட்டது. ஒரே ஒரு தடையென்னவெனில், பொருளுற்பத்தி முறையில் ஏற்படும் தங்குதடையற்ற அபிவிருத்தியை உபயோகப்படுத்திக்கொள்ளும் அளவிற்கு ஜனங்களும் வளர்ச்சியடைய வேண்டியதே. ஸ்டாலின் கூறினமாதிரி—சில சமூக அமைப்புகள் (முதலாளித்வ சமூகம்) இதை வேறுமாதிரியில் செய்தது. அத்துடன் சோவியத் யூனியனைக்கண்டு ஏளனம் வேறே செய்தது. அவர்களுக்கு நிபுணத்வம் பெற்ற ஆட்கள் அதிகந்தான் இருந்தார்கள். ஆனல் அவர்களின் உழைப்புக்கு பிரயோஜனம்தான் இல்லை. சோவியத் ஐக்யக் குடியரசு வேண்டிய சாதனங்களையும் சந்தர்ப்பத்தையும் சிருஷ்டித்தது. ஆனல் அனுபவமில்லா ஜனங்கள் எடுத்த எடுப்பிலேயே சரியாக வேலைசெய்ய முடியவில்லை. பல தவறுகள் ஏற்பட்டன. அதைக்கண்டு பிற்போக்காளர்கள் ஏளனம் செய்தனர். ஆனல் ஜனங்கள் வளர்ச்சியடை

வார்களென்பதில் சந்தேகமில்லை. மக்களின் வளர்ச்சிக்கு எல்லையே கிடையாது.

தேசம் முன்னேறியுள்ள நிலைமையைக்கண்டு 1935-ல் ஸ்டாலின் கூறுகிறார்: "பொருளுற்பத்தியில் நாம் அதிக அபிவிருத்தி யடைந்திருக்கிறோம் என்பது வாஸ்தவம். ஆனால் அத்துடன் நாம் திருப்தி அடைந்துவிட முடியாது. இன்னும் நாம் வெகுதூரம் முன்னேறவேண்டும். நிபுணத்வம் வளர்ச்சி யடையவும், அதைப் பூராவாக நாம் உபயோகப்படுத்தவும் தேவையாயிருப்பது அந்த நிபுணத்வத்தில் தேர்ச்சிபெற்ற ஜனங்கள்தான்.

"உலகம் இன்றையதினம் பெற்றுள்ள விலைமதிக்க முடியாத செல்வங்களிலெல்லாம் அதிக மதிப்புடையதும், மிக முக்கியமானதும் ஜனங்கள்தான் 'காடர்கள் (உற்சாகத்துடன் முன்வந்து வேலைசெய்யும் உழைப்பாளிகள்) தான் எல்லாவற்றையும் நிர்ணயிக்கின்றார்கள்' என்பதைக் கண்டிப்பாக உணரும் காலம் வந்துவிட்டது. இயந்திரத் தொழில்கள், விவசாயம், போக்குவரவு, சைன்யம்—இவைகளெல்லாவற்றிலும் திறமையான காடர்களை ஏராளமாக நாம் பெற்றால்—நம்முடைய தேசம் அசைக்கமுடியாத வலிமையுடையதாய்விடும். அம்மாதிரியான காடர்கள் நமக்கு இல்லாவிடில் நாம் இரண்டு கால்களும் நொண்டியாயிருக்கும் மனிதனைப் போல்தான்."

சோவியத் ஐக்கிய நாடுகளில் ஸ்டாலின் தலைமையின் கீழ் உலகமே பிரமிக்கத்தக்க மாறுதல்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இதைச் சித்தரிக்கும் புள்ளிவிவரங்கள் கொண்ட பல புஸ்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. கலைகள், புதிய உண்மைகள், விஞ்ஞான நுட்பங்கள் முதலியவைகளில் சோவியத் எவ்வளவு உச்சஸ்தானத்தை அடைந்

திருக்கிறது என்பதைப் பல புஸ்தகங்களில் காணலாம். ஆனால், ஸ்டாலின் வழிகாட்டுதலினால், சோவியத் மக்கள் என்ன சாதித்திருக்கின்றார்கள்? அவர்கள் எவ்வாறு மற்ற (முதலாளித்வ) நாட்டுமக்களைக் காட்டிலும் மாறுபட்டிருக் கின்றார்கள்! ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய திறமை யைக் காட்டவும், தான் தன்னுடைய முயற்சிகளினாலேயே அபிவிருத்தி அடையவும் என்ன சந்தர்ப்பமளித்திருக்கின்றார் கள்! இந்தக் கேள்விகளுக்குக்கீழ் கண்டவைதான்பதில். எப் படியெனில், பழங்காலத்திய, அநாகரிகமான, மிகப் பிற் போக்கான, எழுத்து வாசனையே யறியாத, மூடநம்பிக்கை கள் பலகொண்ட, துன்பத்திலும், சோர்விலும் கிடந்த ரஷ்ய விவசாயியை நினைத்துப் பாருங்கள். அதேசமயத் தில் "சோவியத்தில் ஒருநாள்" என்ற சினிமாப் படத்தை யும் போய்ப்பாருங்கள். 'என்ன இது! வெறும் ரஷ்யப் பிரசாரம்தானே!, என்று நீங்கள் நினைத்தால், லார்டு பீவர் புரூக்கின் (பிரிட்டிஷ் மாஜி உற்பத்தி மந்திரி) ரேடியோ பிர சங்கத்தை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

"அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த கேப்டன் பால்போர், கர்னல் லியான், விமான மந்திரிக் காரியாலயத் தைச் சேர்ந்த ஆர்ச்சிபால்ட் ரௌலாண்ட்ஸ், முதலியவர் கள் விமானங்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டனர்- அவர்கள் கூறினதாவது: நம் முடைய நாட்டிலும், அமெரிக்காவிலும் விமானங்களை உற் பத்தி செய்வதிலும், இன்ஜின்களை உற்பத்தி செய்வதிலும், —திறமையிலும் சரி, தொகையிலும் சரி—சோவியத் யூனி யன் ஒரே படியில்தானிருக்கின்றது,

"நாம் ரஷ்யாவிற்கு அனுப்பக்கூடிய, பிரிட்டிஷ்-அமெ ரிக்க விமானங்களை வரவேற்பதற்காக, ஒரு விமான நிலை யத்தைக் கட்டுவதாக சோவியத்தில் திட்டமிட்டதைப்

பற்றி கர்னல் லியான் கூறுகிறார். அதற்காக, மரங்கள் நிறைந்த ஒரு காட்டை வெட்டி தரை மட்டமாக்கினர்; சதுப்பு நிலத்தை கெட்டியான தரையாகச் செய்தனர்; ஒரு நீளமான சாலையை (ரோடு) ஏற்படுத்தினர். விமானங்கள் புறப்படவும், வந்திறங்கவும், இரண்டு நீளமான பாதைகளைக் கட்டினர். . . . . இவ்வளவும் முப்பதே நாளில்தான் முடிந்தது.

" நீங்கள் கேட்கலாம்; தங்கள் தேசத்திலேயே செய்யப்பட்ட ஆயுத தளவாடங்களையும், வெளிநாடுகளிலிருந்து அவர்களுக்கு வந்துள்ள ஆயுத தளவாடங்களையும், அவர்கள் பூராவாக உபயோகப்படுத்துகின்றனரா! அதனால் முழு உபயோகத்தையும் அவர்கள் பெறுகின்றனரா! என்று. அதற்கு விடை, ஆம். . . .உண்மையில், ரஷ்யர்கள், நூதன இயந்திரங்களைச் செய்வதிலும், அவைகளை உபயோகப்படுத்துவதிலும், மிகுந்த புத்திக் கூர்மை வாய்ந்தவர்கள். நம்முடைய தளவாடங்களும், பேக்டரிகளும் அவர்களுக்கு அளிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அவர்கள் முழுக்க முழுக்க உபயோகப்படுத்திக் கொள்கின்றார்கள்."

கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள் : மிகக்குறைந்த காலம் தான்! 20 வருஷங்களுக்குமுன் அநாகரிகமான முரட்டுத்தனமான தாடியும் மீசையும் கொண்ட (முஜிய்க்)விவசாயிகளாயிருந்தனர். ஆனால் 5 வருஷங்களுக்கு முன்னால், ஸ்டாலினின் கோஷம் என்ன! "காடர்கள்(உண்மை ஊழியர்கள்) தான் எல்லாவற்றையும் நிர்ணயிக்கின்றனர்." (தேசத்தின் முன்னேற்றமே காடர்களைப் பொறுத்துத்தானிருக்கின்றது.) —இன்று நம் கண் முன்னால் என்ன காண்கின்றோம்?

உலகத்தில் இயந்திரத் தொழில் வளர்ச்சியில் மிக முன்னேற்றமடைந்த (முதலாளித்வ) தேசங்களின் நிபுணர்களே " இயந்திரங்களின் நுட்பத்திலும், அவைகளை உபயோகிப்

பதில் ரஷ்யருக்குள்ள திறமையைப் பற்றியும்'' வியப்படை கின்றனர்.

1935–ல் தான் ஸ்டக்கானேவ் (அதிக உற்பத்தி) இயக்கம் பிறந்தது. ஸ்டாலினல் அந்த இயக்கத்திற்கு பெருமிதமாக ஆதரவு கொடுக்கப்பட்டு இப்பொழுது அதிக உற்பத்தி அமோகமாக ஏற்பட்டு வருகின்றது இந்த முறை சாதாரணத் தொழிலாளிகளாலேயே, ஏற்பட்டது. பல புதிய வழிகள் மூலமும், நுணுக்கமான முறைகளினலும், உற்பத்தியை அதிகப்படுத்துவதும் அதே சமயத்தில் வேலையை சுலபமாக்குவதுமாகும். சோவியத் யூனியனைப் பற்றி அவ்வளவு நல்ல அபிப்ராயம் கொண்டிராத சர் வால்டர் சிட்ரின் (பிரிட்டிஷ் தொழிற்சங்கக் காங்கிரஸ் தலைவர்) கூட, 'சோவியத் யூனியனில் அதிக உற்பத்திக்குக் காரணம் கடுமையான உழைப்பல்ல, நுட்பமான முறைகளே' என்று கூறியிருக்கிருர்.

இதே 1935-ல் தான் புதிய அரசியல் சட்டம்—''ஸ்டாலின் கான்ஸ்டிடியூஷன்'' உண்டாக்கப்பட்டது. இந்த அரசியல் சட்டம் மனித சமூகத்தின் சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் இம்மியும் ஐயமில்லை. ஏனெனில் இதுதான் முதல் தடவையாக மனித சமூகத்திற்கே ஒரு சட்டத்தை உண்டாக்கிற்று. ''வேலை செய்யும் உரிமை, ஓய்வெடுத்துக் கொள்ளும் உரிமை, கல்வி பெறும் உரிமை முதலியவைகள் அளிக்கப்படுகின்றன. இது எல்லா மக்களுக்கும் உண்டு. ஆண், பெண் என்ற வித்யாசமின்றி, நிறபேதமின்றி, மதம், வகுப்பு சமூகம்-ஆகிய இந்தப் பாகுபாடின்றி எல்லா மக்களும் இவற்றை அனுபவிக்க உரிமையுடையவர்கள்''என்பதே இச்சட்டத்தின் ஜீவ அம்சம். சோவியத் சமூகத்திற்கு முந்தின சமூகங்களிலெல்லாம், இந்த உரிமைகள் மனிதர்களின்

விருப்பங்களாகவும், எட்டாத லட்சியங்களாகவும் தானிருந்தன. இந்த சோஷியலிஸ்ட் சமூகத்தில் இவை நடைமுறை விஷயங்களா யிருக்கின்றன.

இவை சோவியத் மக்களுக்கு மாத்திரமல்ல, சர்வதேச மக்களுக்கும் முக்யத்வம் வாய்ந்ததென ஸ்டாலின் கருதினர். சோவியத் மக்களுக்கு இது "தங்களுடைய போராட்டங்களின் ஒரு சரித்திரம்; மனித சமூகத்தின் விடுதலைக்காக நடத்தின போராட்டங்களில் கிடைத்த வெற்றிகளின் ஜாபிதா"—ஆக இருந்தது. முதலாளித்வ நாடுகளின் மக்களுக்கு, "காரியத்திலிறங்குவதற்கு வழிகாட்டும் வேலைத் திட்டமாக இருந்தது. என்ன சாதிக்கமுடியும் என்பதற்கும் அத்தாட்சியாயிருந்தது."

சோவியத் வெற்றியின் இந்த அர்த்தத்தை ஸ்டாலின் முதலிலிருந்தே உணர்ந்திருந்தார், "சோவியத் ஐக்ய நாடுகளின் தொழிலாளி வர்க்கம் உலகத் தொழிலாளிவர்க்கத்தின் ஒரு பகுதியே. சோவியத் தொழிலாளி வர்க்கத்தின் சலியா உழைப்பினுல் மாத்திரம் நாம் வெற்றியடையவில்லை; சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவினுலுங் கூடத்தான். இந்த ஆதரவில்லாமல் போயிருந்தால், வெகு நாளைக்கு முன்பே நாம் சின்ன பின்னப்பட்டிருப்போம். சர்வதேச புராலிடேரியட்டின் (தொழிலாளி வர்க்கத்தின்) 'போர்ப் படை' தான் (முன்னணிப் படைதான்) சோவியத் யூனியன் என்று சொல்லப்படுகிறது. ஆம். வாஸ்தவமே. மிக நன்ருகச் சொன்னர்கள். ஆனல், இதனல் நமக்கு மிக முக்யமான நிறைவேற்றிவைக்க வேண்டிய பொறுப்புகளேற்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சர்வதேசத் தொழிலாளிவர்க்கம் நம்மை ஆதரிப்பதின் காரணம் என்ன? இந்த ஆதரவுக்கு நாம் எவ்வாறு தகுதியுள்ளவர்கள்? . . . . நாம் ஒரு காரியத்திலிறங்கி யிருக்கின்

றேம். இதில் வெற்றி கிட்டினுல், உலகம் பூராவையும் தலைகீழாக இது மாற்றிவிடும்; உலகத் தொழிலாளிகளனைவரையும் இது விடுதலை செய்யும்,—என்ற இந்த உண்மையே நம்மை சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவுக்குத் தகுதியுள்ளவர்களாகச் செய்கிறது. ஆனுல் வெற்றிக்குத் தேவையாயிருப்பது என்ன? நம்மை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் 'இதுதான் என்னுடைய முன்னணிப்படை; இதுதான் என்னுடைய போர் முன்னணி; இதுதான் என்னுடைய தொழிலாளி வர்க்க அரசாங்கம்; இதுதான் என்னுடைய தாய்நாடு: சோவியத் மக்கள் அவர்களின் லட்சியத்திற்காக முன்னேறிச் செல்கின்றனர்; அந்த லட்சியந்தான் நம்முடைய லட்சியமும்; அவர்கள் திறமையாக இதைச் செய்கின்றனர்; ஆகவே நாம் அவர்களை ஆதரிப்போம்!' என்று கூறும் வகையில் நாம் முன்னேறிச் செல்லவேண்டும்'' என்று ஸ்டாலின் 1931-ல் கூறினுர்.

"நம் நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களும் வெற்றியும் முதலாளித்வ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தைத் தட்டிஎழுப்பி, உணர்ச்சி ஊட்டி, அதனுடைய சக்தியிலும், அதனுடைய வெற்றியிலும் அதற்குள்ள நம்பிக்கையை பலப்படுத்த உதவுமேயானுல், அப்பொழுது நம் கட்சி வேலை வீணுகவில்லை என்று நாம் சொல்லமுடியும். இதை செய்வதும் நிச்சயம்'' என்று ஸ்டாலின் 1939 லேயே கூறினுர்.

இந்தக் காலத்தில்,(1931-1939-ல்)ஏற்கனவே இருந்தபல தரப்பட்ட எதிர்ப்பு கோஷ்டிகள் என்ன ஆயின? இயற்கையாகவே, ஸ்டாலினுல் வகுக்கப்பட்டு, கட்சியினுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களின் வெற்றியினுல் எதிர்ப்பு கோஷ்டி நாளுக்குநாள் பலஹீனப்பட்டே வந்தது. நாளுக்கு

நாள் அபிவிருத்தியடைந்துவரும் சோவியத் ஐக்ய நாடுகளைப் போன்ற ஒருதேசத்தில், சர்க்காரும், அதற்கு எதிர் கோஷ்டியாரும் என்றோ, இப்பொழுது ஒரு கோஷ்டி அதிகாரத்திற்கு வருவது, பின் எதிர் கோஷ்டியார் வருவது என்றோ நினைப்பதற்கே இடமில்லை. சோவியத் நாட்டைப்போன்ற ஒரு நாட்டில், சர்க்காரின் கொள்கையும், கட்சியின் கொள்கையும், தேசத்தின் நலனுக்குகந்தது என்பது சம்பவங்களால் நிரூபிக்கப்படுகிறது. எந்தஅளவிற்கு அந்தக்கொள்கை வெற்றியடைகின்றதோ, அந்த அளவிற்கு எதிர்ப்பாளிகளின் அபிப்பாயம் ஆதரவின்றி சிதறடிக்கப்படுகின்றது; பொதுஜன அபிப்ராயத்துக்குமுன் அந்த எதிர்ப்பு க்ஷணமும் நிற்கமுடியாது போகிறது. ஆனால் எதிர்ப்பு இன்னும் இருக்கவேண்டுமேயானால், அது ரகசியமான பலாத்கார முறைகளைக் கையாளும் எதிர்ப்பாகத் தானிருக்க முடியும். ஏனெனில் நடைமுறையில் ஜனங்கள் அதை நிராகரிப்பதில் ஒன்றுபட்டிருப்பர்.

ஆம். உண்மையில் எதிர்-கோஷ்டியினருக்கு இந்தக் கதிதான் சோவியத் யூனியனில் ஏற்பட்டது. 1931-32 வருஷங்களில்தான் கூட்டுப்பண்ணை -முறையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான போராட்டம் அதனுடைய உச்ச நிலையில் இருந்தது. ஒவ்வொருவரும் அபரிமிதமான தியாக உணர்ச்சியுடன் வேலை செய்தனர். ஒவ்வொருவரையும் கஷ்டமான பிரச்னைகளும், பொறுமை யிழக்கும் பிரச்னைகளும் எதிர் நோக்கின. நூற்றுக் கணக்கான ஆயிரக் கணக்கான சுயநலமற்ற வீரர்கள் கூட்டுப்பண்ணை முறையை என்ன கஷ்டங்கள் நேரிடினும் வெற்றிபெற நடத்துவதென உறுதிகொண்டனர். ஸ்டாலினால் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தை கட்சி முழுமையாக ஆதரித்தது. இத்திட்டம் வெற்றிபெற முடியுமென்பதை எதிர் கோஷ்டியி

னர் நம்பவேயில்லை. தோல்வி மனப்பான்மையும் கோழைத்தனமும் உடைய இவர்கள், இத்திட்டத்தை எதிர்த்து மறுபடியும் பழைய நிலைமைக்கே பின்வாங்க எந்த முறையும் கையாளுவதென முடிவு செய்தனர். அவர்களுக்குள்ளேயே பலவித நோக்கங்கள்கொண்ட இந்த எதிர்-கோஷ்டியினர், போல்ஷ்விக் கட்சியின் முக்ய தலைவர்களைக் கொல்லவும், கூட்டுப் பண்ணைகளை பாழ்படுத்தவும் முயன்றனர். இந்தப் பிற்போக்காளர்களைப்பற்றி 1927ல் ஸ்டாலின் கூறியிருப்பதைப் பாருங்கள்.

“கடலில் புயல்காற்று அடிக்கும்பொழுது செம்படவர்களைப் பார்த்திருக்கிறீர்களா? . . . நான் பார்த்திருக்கின்றேன், பலதடவைகளில். அந்த சந்தர்ப்பத்தில், செம்படவர்கள் தங்களுடைய பரிவாரங்களையெல்லாம் திரட்டி, புயல்காற்றை எதிர்த்து தைர்யமாகக் கரை சேர அவர்களுக்கு உற்சாகமூட்டுவார்கள். ‘தோழர்களே முன்வாருங்கள். துடுப்புகளை உறுதியாகப் பிடியுங்கள். அலைகளை எதிர்த்துக்கொண்டு நாம் படகைக் கடத்திச் செல்வோம்!’ என்று ஆர்ப்பரிப்பர். ஆனல், அவர்களிலும் சிலர் இருக்கின்றனர். ஒரு புயல்காற்று வருவதை அறிந்ததும், அவர்கள் தைர்யமிழந்து விடுவார்கள். சிணுங்க ஆரம்பிப்பார்கள். தங்களுடைய பரிவாரங்களின் மனே உறுதியையே குலைத்துவிடுவார்கள். ‘என்ன கஷ்டகாலம்! ஒரு புயல்காற்று வந்துவிட்டது. எல்லோரும் படகினுடைய அடியிலே படுத்துக்கொள்வோம். எப்படியாவது அலைகள் நம்மை கரைக்குக் கொண்டுபோய் சேர்க்கும், படுத்து கண்ணை மூடிக்கொள்ளுங்கள்’ என்று ஓலமிடுவார்கள்”

இந்த சோவியத் எதிர்ப்பு-கோஷ்டிகள் எந்த விஷயத்தில் சோவியத்தை எதிர்க்கிருர்கள் தெரியுமா? முதலாளித்வ நாடுகள் எவ்வாறு சோவியத்தைத் தூற்றினர்களோ, அதே

மாதிரி, இவர்களும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நடக்க முடியாத காரியமென்றும், வீணெண்ணமென்றும் கூறினர். முதலாளித்துவ உலகத்தைப்போலவே, இவர்களும், கூட்டுப் பண்ணைமுறை அதிகநாள் நீடிக்கமுடியாது, வெகு சீக்கிரத்தில் அழிவு நிச்சயம் என்று முடிவுகட்டினார்கள். அநாகரிகமான முஜிய்க் (ரஷ்ய விவசாயி) என்றும் ஒரு இயந்திர நிபுணனாக வரமுடியாது என்றும் அவர்கள் நினைத்தனர். "ரஷ்ய விவசாயி தன்னுடைய தனிச் சொத்து ஒரு ஏக்ரா பூமியாயிருந்தாலும் அதில் அளவுகடந்த பாசம் கொண்டிருக்கிறான். அதை விட்டுக்கொடுக்கமாட்டான்" என்று அவர்கள் நம்பினார்கள். தாசானுதாசர்களாய் முதலாளித்வ உலகம் கூறினதையே ஒப்பித்தார்கள். அபிப்ராய ஒற்றுமையுள்ளவர்கள் ஒன்றாகச் சேர்வதுபோல, சோவியத் நாட்டிலே இருந்த இத்தேசத் துரோகிகள். வெளிநாடுகளிலுள்ள சோவியத் விரோதிகளுடன் ஒன்றுசேர்ந்து 'திரண்டு' வந்தனர். தேசத்தில் நாளுக்குநாள் ஸ்டாலினின் திட்டம் கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமன்றி திட்டத்தின் வெற்றியும் காணக் கிடைத்தது.

இங்நிலையில் தேசத்தில் எதிர்-கோஷ்டியினர் எங்கு சென்று ஆதரவு தேடுவது? ஏழை விவசாயினிடமிருந்து பெறமுடியாது ஏனெனில் கூட்டுப்பண்ணை முறை ஏழை விவசாயிகளுக்கு நன்மையளிக்கின்றது. தொழிலாளிகளிடமிருந்தும் ஆதரவுபெற முடியாது. ஏனெனில் இப்பிற்போக்காளர்களின் தோல்வி மனப்பான்மையை பலதடவைகளில் தொழிலாளிகள் நிராகரித்திருக்கின்றனர். பணக்கார விவசாயிகளாகிய குலக்குகளிடமிருந்தும் ஆதரவு பெறமுடியாது. கூட்டுப்பண்ணை முறையை எதிர்ப்பதும், அதை தாமதிப்பதும் குலக்குகளுக்கு ஏற்றதாகத்தானிருந்திருக்கலாம். எதிர்-கோஷ்டியினரும் ஒருகாலத்தில் இவர்களின்

மேல் நம்பிக்கை வைத்துத்தானிருந்தார்கள். ஆனால் இப்பொழுது, சோவியத் ரஷ்யாவிலிருந்த முதலாளித்துவத்தின் கடைசி சின்னமாகிய இந்தக் குலக்கும் இப்போது மறைந்துவிட்டான். ஆதலால் தேசத்தில் எந்தப் பகுதியிலிருந்தும் யாரிடத்திருந்தும் இந்த எதிர்-கோஷ்டிக்கு ஆதரவு கிடைப்பதாயில்லை. இதன்காரணமாக, இவர்கள் ஆதரவுக்கு வெளி ஆட்களை எதிர்பார்க்க வேண்டியதாயிற்று. இந்தக் காலத்தில்தான் ஜெர்மனியில் பாசிஸம் அதிகாரத்திற்கு வந்தது. சர்வதேசத் தொழிலாளிகள் சரியான காலத்தில் தங்கள் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ளாததினால்தான் ஹிட்லர் அதிகாரத்திற்கு வரமுடிந்தது. தொழிலாளி வர்க்கத்தின் சக்தியில் நம்பிக்கையில்லாதிருந்தவர்கள், பாசிஸத்தைத் தோற்கடிப்பதில் மக்களுக்குள்ள சக்தியிலும் நம்பிக்கையற்றிருந்தனர். அதற்கு (பாசிஸத்தின்) முன்னால் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர். அதற்குக் கோபமேற்படாமல் தடுத்க்க வழி தேடினர். அதற்கு விட்டுக்கொடுத்து ராஜி பேசும் காரியத்திலிறங்கினர். அதற்குத் தங்கள் சாம்ராஜ்யத்தின் சில பகுதிகளை விட்டுக்கொடுத்து, மற்றவைகளை தங்களிஷ்டப்படியே ஆளலாம் என்று பகற்கனவு கண்டனர்.

கூட்டுப்பண்ணை வெற்றியாயிற்று. எதிர்ப்பாளர்களின் ஆகாயக் கோட்டை இடிந்து விழுந்தது. எங்கும் சுபிக்ஷம். எல்லோருக்கும் போதிய உணவுகொடுக்க முடிந்தது. ஏன்? தேவைக்கதிகமாகவும் உற்பத்தி செய்ய முடிந்தது. ஸ்டாலினுடைய திட்டந்தான் சரியானது என்பதை இவை நிரூபித்தன. இனிமேல் எதிர்-கோஷ்டி என்ன செய்யமுடியும்! ஆம். அது ஒரு எதிர்-கோஷ்டியாக இனிமேல் இருக்க முடியவில்லை. அது ஒரு அரசியல் பிரிவாக இருப்பதற்கு வேண்டிய ஆதரவில்லை. அஸ்திவாரம் பெயர்ந்து அந்தரத்தில் தொங்கவேண்டியதாயிற்று. சோவியத் மக்களுடன் தனக்

குள்ள முரண்பாட்டை வெளிப்படையாகக் கொண்டுவர அதற்குத் தைரியமில்லை. சம்பவங்கள், பிரத்தியட்ச நிகழ்ச்சிகள் அவ்வளவுதூரம் அதன் செல்வாக்கைக் குறைத்து விட்டபோது எவ்வாறு அதற்கு தைரியமேற்படும்? ஆதலால் இனிமேல், ஒரு ரகசிய கொலைஞர்களின் 'கூட்டமாக'வே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சோவியத்தின் வெற்றிகள் அதை மேலும்மேலும் பலஹீனமாக்கிற்று. ஆதலால் இயற்கையாகவே இது நாசவேலைகளிலிறங்க வேண்டியதாயிற்று. எங்கு சிறு குற்றங்குறைகளிருக்கின்றன, பலஹீனமான இடம் எது என்று கண்டுபிடித்து அதை தனது 'போர்தளமாக' உபயோகிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் ஸ்டாலினும் அவரது சகாக்களும் காட்டிய சரியான பாதை இந்த முட்டுக்கட்டைகளெல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி வந்தது. வெற்றிக்கு உத்திரவாதமளித்தது. ஆதலால் தவிர்க்கமுடியாமல் எதிர்-கோஷ்டியினர் சோவியத் தலைவர்களைக் கொலைசெய்வதில் திரும்பினர். இவர்கள் தங்களுடைய அன்னிய சகபாடிகளுக்கு பதிலுதவியாகச் செய்வதற்கு ஒன்றுமேயில்லை. ஆதலால் இந்த எதிர்-கோஷ்டி அவர்களுடன் ஒண்டிக்கொள்ள வேண்டியதாயிற்று. அவர்களின் கைப்பாவையாகவே ரஷ்யாவில் இருந்துவந்தது. அவர்களுக்காக சதிவேலைகள் செய்து வந்தது. ஆனால் அதே சமயத்தில் அவர்களால் மிக இழிவாக நடத்தப்பட்டும் வந்தது. சதிகாரர்கள், கொலைகாரர்கள், பாசிஸ்டு உளவாளிகள்—இவர்களின் கதிதான் சோவியத் எதிர்ப்பாளிகளுக்கு சரித்திரம் கொடுத்த தண்டனை. ஸ்டாலினால் வகுக்கப்பட்டு கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டந்தான் உண்மையான சோஷியலிஸ்டு திட்டமென்பதையும் சரியான திட்டமென்பதையும் சம்பவங்கள் நிரூபித்தன. சோவியத் வெற்றியால் இந்த எதிர்கோஷ்டியினர் பூராவாக மக்களினின்றும் ஒதுக்கப்பட்டனர்.

சோவியத் கொள்கையை, கொள்கைபூர்வமாக மட்டும், இந்த எதிர்-கோஷ்டியினர் எதிர்த்து வந்தகாலம் வரை, அவர்களை அச் சமூகத்தில் வாழ்வதற்கு அனுமதித்தனர். பொறுப்பு வாய்ந்த வேலைகளிலும் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவர்களுடைய கொலைகாரச் செயல்கள் வெளியானவுடனேயே, அவர்களை அரசியலிலிருந்தே களைந்தெறிந்தனர். இச்சம்பவம் பழைய விஷயமொன்றை ஞாபக மூட்டுகிறது. சில வருஷங்களுக்கு முன்னால் ஜாரிட்ஸின் பிரதேசத்திலிருந்து ஸ்டாலின், லெனினுக்குத்தந்தியடித்திருந்தார். "நீங்கள் மனச்சஞ்சலமின்றி இருக்கலாம்: நாங்கள் உறுதியுடன் நிற்கிறோம். விரோதிகளுடன் நாங்கள் விரோதிகளைப் போலவே நடந்து கொள்வோம்" என்று. லெனினுடைய சமாதிக் கருகில் நின்று' சோவியத்தின் புகழுக் கேற்றபடி உண்மையாக நடந்துகொள்வதாக ஸ்டாலின் சபதமெடுத்தார். இப்பொழுது, இறந்த தலைவருக்கு மறுபடியும் அச்சபதத்தைக் கூறுவது போலிருந்தது.

இவ்விஷயத்திலும் ஏற்கனவேயே சரித்திரம் தீர்ப்புக் கொடுத்துவிட்டது. பாஸிஸத்தால் பல நாடுகள் தாக்கப்பட்டன அவைகளிலெல்லாம் சோவியத் யூனியன் ஒன்றே மலைபோன்று உறுதி குலையாமல் நிற்கிறது. விரோதியின் முழுத் தாக்குதல்களையும் எதிர்த்து பதில்கொடுக்கிறது. அதனுடைய முகாமில் (அணியில்) ஊசலாட்டக்காரர்களோ, துரோகிகளோ மருந்துக்கும்கூடக் கிடையாது. ஸ்டாலினுக்கிருந்த உறுதியும், தீர்க்க தரிசனமும், மற்ற தேசத்தலைவர்களுக்கும் இருந்திருக்குமேயானால், எவ்வாறு நிரபராதியான கணக்கற்ற உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும்! எவ்வளவு புராதனச் சிறப்புவாய்ந்த மக்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பார்கள்! மனித சமூகம் இன்று எவ்வளவு சுபிக்ஷமாகவும், எவ்வளவு பலம் வாய்ந்ததாகவும் இருக்கும்!

யுத்த காலம்

ஏனெனில் இந்தக்காலத்தில் திடீர் தாக்குதலுக்குத் தயாரிப்புகள் செய்ய வேண்டியிருந்தது.

வெகுநாளாக இத்தனை மணிக்கு என்று கூட கணக்காக எதிர்பார்க்கப்பட்டு வந்த ப்ரளயம் (உலகப்‧போர்) சோவியத் யூனியனையும், உலகம் பூராவையும் மூழ்கடிக்க வந்துகொண்டிருந்தது. சோவியக் மக்களின் நிலைமை 1917-ம் வருஷத்திய நிலைமையினின்றும் வெகுதூரம் முன்னேற்றமடைந்ததாயிருந்தது. முன்னெப்பொழுதுமில்லாத புதியமாதிரியான வாழ்க்கை (சோவியத் மக்கள்) வாழ்ந்து வரத்தொடங்கி விட்டனர். அதாவது மற்ற நாடுகளில் சமூகத்தின் செல்லக் குழந்தைகளான, சலுகைகள் பெறும் ஒரு சிலரே வாழ்கின்ற வாழ்க்கையை சோவியத் மக்கள் பூராவும் அடையும் தருணத்திலிருந்தார்கள்.

"ஒவ்வொருவரும் அவரவர்களின் திறமைக்குத் தக்கபடி வேலை செய்வது; அவர்களது வேலைக்குத் தக்கபடி கூலி பெறுவது" என்ற அடிப்படையில் சோஷியலிசம் ஏற்படுத்தப்பட்டாய்விட்டது. சமூகம் பூராவிலும் ஒவ்வொருவருக்கும் சமசந்தர்ப்பம். யார் சிறப்பாக வேலை செய்கிறார்களோ அவர்களுக்கு அதற்குத்தகுந்த வெகுமானம். ஆனால் அதே சமயத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, பூரா சமூகத்தின் முழு முயற்சியும் அவசியம். இந்த நிலைமையிலிருந்து, "ஒவ்வொருவரும் அவருடைய தேவைகளின்படி பெறுவர்" என்ற கம்யூனிஸ்டு சமூக அமைப்புக்குப் போகவேண்டுமெனில் ஒரேஒரு சிறிய விஷயந்தான் பாக்கி. அது உற்பத்தியைப் பெருக்குவது. பஞ்சத்தைப் போக்கி செழிப்பை உண்டாக்குவது.

1939-ல் நடந்த 18-வது கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிர

ளில் சமர்ப்பிப்பதற்காக, மத்யக் கமிட்டிக்குக் கொடுத்த ரிப்போர்ட்டில் ஸ்டாலின் கீழ்கண்டவாறு கூறுகிறார். "உற்பத்தியின் நுட்பங்களிலும், உற்பத்தி விகிதாசாரத்திலும், நாம் உலகிலுள்ள பிரதான முதலாளித்வ நாடுகளேயும் தோற்கடித்து விட்டோம். அது நல்லதுதான்; ஆனால் அது போதாது. பொருளாதாரத் துறையிலும் நாம் அம் முதலாளித்வ நாடுகளைத் தோற்கடித்தாக வேண்டும். நாம் அதைச் செய்ய முடியும். செய்யத்தான் வேண்டும். அம்மாதிரி பொருளாதாரத்திலும், நாம் மற்ற முதலாளித்வ நாடுகளைத் தோற்கடித்தால்தான் நம் மக்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் போதிய அளவுக்குக் கிடைக்கும். அதிகமாகவும் கிடைக்கும். அப்பொழுதுதான் கம்யூனிஸ்டுசமூகத்தின் முதல் படியிலிருந்து 2-வது படிக்குச் செல்கின்றோம் என்று நாம் கொள்ள முடியும். இதைச் செய்ய முடியும். செய்யவும் வேண்டும்."

"சோவியத் யூனியனின் 18 கோடி மக்கள் உற்பத்திசெய்யும் அளவு, சோவியத்தைக் காட்டிலும் குறைந்த ஜனத்தொகையுடைய, முன்னேற்றமடைந்த எந்த முதலாளித்வ நாட்டைக் காட்டிலும், அதிகமாகவே யிருக்கின்றது. தேசத்தின் வலிமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். ஆனால், தனிப்பட்ட ஒரு மனிதனின் செல்வம், தேசத்தில் தலைக்கு உற்பத்தி எவ்வளவு என்பதிலிருந்து தான் அளவிட முடியும் இந்த விஷயத்தில், 100 வருஷங்களுக்கு முன்னாலேயே இயந்திர வளர்ச்சியடைந்த, முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு சோவியத் யூனியன் இன்னும் பின்னணியில்தான் நிற்கின்றது. அவர்களேயும் மீறி முன்னேறுவதற்கு இன்னும் 15, 20, அல்லது 25 வருடங்கள் ஆகும். இன்றைய நிலைமையில் இதைச் செய்ய நமக்குப் போதிய அவகாசமில்லை."

ஏன்? பாசிஸப்பிரளயம்நெருங்கிவிட்டது. இவ்வாபத்தைத்

தவிர்க்க, நாகரிகத்தின் அழிவிலிருந்து தோன்றிய பாசிஸ்டு கொள்ளைக்காரத்தனத்திற்கெதிராக, சமாதானம் விரும்பும் எல்லா மக்களின் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென்று ஸ்டாலின் அடிக்கடி எடுத்துக்காட்டி வந்திருக்கின்றார். அந்த தேசங்களின் சர்க்கார்கள் இதற்கு சம்மதிக்காவிடில், அச் சர்க்காரை மாற்றிச் சமாதான முன்னணிக்கு இணங்கும் சர்க்காரை ஸ்தாபிக்க மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். ஆனால் அங்கு தொழிலாளிவர்க்கத்தின் தலைவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் சில பிற்போக்குத் தலைவர்கள் இதற்குடன்படவில்லை. அவர்கள் தங்கள் வழியே சிறந்ததெனக் கடைப்பிடித்தனர். இதன் விளைவு என்ன என்பது இன்று எல்லோரும் கண்கூடாகப் பார்க்கின்றனர்.

"சமாதானம் பிரிக்க முடியாதது" என்று உலக மக்கள் எல்லோரும் சமாதானத்திற்கு கூடுவதின் அவசியத்தை ஸ்டாலின் உலகின் எல்லா நாடுகளுக்கும், சர்வதேச சங்கத்தில் சோவியத்தின் பிரதிநிதியாயிருந்த தோழர் லித்வினுப் மூலம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் அந்த தேசங்களின் சர்க்கார்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. போலி சமாதானத்திற்காக, பாசிஸ்டுகளுக்கு ஒரு சிறு தேசத்திற்குப் பின் மற்றொன்றாக, இரையாகக்கொடுத்து வந்தனர். தன்னுடைய ஒவ்வொரு பிரசங்கத்திலும் ஸ்டாலின், 'பாசிஸ்டு ஆக்ரமிப்புக்கு முன்னால் இந்த 'தலையிடாக்கொள்கை'யை அனுஷ்டித்தால் இதன் விளைவென்னவாகும்?' என்று, பிரிட்டிஷ் பொதுமக்களுக்கும், இதர மக்களுக்கும் எச்சரித்தார். ஆனால் வெளி நாடுகளிலுள்ள பத்திரிகைகள் இந்தப் பிரசங்கங்களை பத்திரிகைகளில் வெளியிடாமல் அமுக்கிவிட்டன.

ஸ்டாலினின் தீர்க்கதரிசனம்

1941-ல் யுத்தத்தைப்பற்றிய ஸ்டாலின் பிரசங்கங்களை வாசித்த எத்தனை பேர்கள், பாலைவனத்தில் வெகுதூரம் பிர

யாணம் செய்தபின் தண்ணீரைக் கண்டவர்கள் போலானார்கள். ஏனெனில் இதுவரையிலும் அவர்கள் கேட்ட பிரசங்கங்களெல்லாம் வெறும் வார்த்தை யடுக்குகளாகவும், வெறும் சொற்பொழிவுகளாகவும்தான் இருந்தன; ஆனால் ஸ்டாலினுடைய பிரசங்கங்களில்தான் முதல் தடவையாக, விஷயத் தெளிவும், வெளிப்படையான உண்மைகளும், சஞ்சலமற்ற தன்மையும் கண்டனர். பிரிட்டிஷ்-கம்யூனிஸ்டுக் கட்சியின் பத்திரிகையாகிய "டெய்லி ஒர்க்கர்" ஒன்றுதான் ஸ்டாலினின் எச்சரிக்கைகளை பூராவாக பிரசுரித்து வந்தது. இதைத் தவிர பிரிட்டனிலிருந்த மற்றப் பத்திரிகைகளும் பிரசுரித்திருக்குமேயானால், பிரிட்டிஷ் மக்களுக்கு எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கும்! கூட்டுப் பாதுகாப்புக்காக ஸ்டாலின் விடுத்த கணக்கற்ற வேண்டுகோள்களுக்கும் பதிலில்லாது போகவே, சோவியத் யூனியன் மற்ற நாடுகளுக்குத் தலைமை வகித்து வழிகாட்ட கீழ்க்கண்டவாறு ஸ்டாலின் திட்டமிட்டார்:

(1) "தன்னுடைய சமாதானக் கொள்கையை மேலும் கடைப் பிடிப்பதுடன், மற்ற நாடுகளுடன் தன்னுடைய வியாபார சம்பந்தங்களைப் பலப்படுத்துவது.

(2) யுத்த வெறியர்கள் நம் நாட்டை யுத்தத்தில் இழுத்து விடாமல் உஷாராக இருப்பது. தங்கள் நலன்களைப் பெற நம்நாட்டை யுத்தத்தில் இறக்கி, அவர்களுக்காக சண்டை போட உபயோகப்படுத்தாமல் பார்த்துக்கொள்வது.

(3) செஞ்சேனை, செங் கடற்படை இவைகளின் வலிமையை எவ்வளவு பலப்படுத்த முடியுமோ அவ்வளவு பலப்படுத்துவது.

(4) சமாதானத்திலும், தேசங்களுக்குள்ளே பரஸ்பர ஒத்துழைப்பு வேண்டுமென்பதிலும் சிரத்தையுள்ள எல்லா தேசங்களின் தொழிலாளி மக்களுடனும், சோவியத் யூனி

யன் தன்னுடைய உறவைப் பலப்படுத்துவது'' (மார்ச் 1939-ல் கட்சியின் 18-வது காங்கிரஸில் செய்த பிரசங்கம்).

ஸ்டாலினுடைய இந்த தீர்க்க தரிசனத்தின் காரண மாகத்தான் சோதனைக்காலம் வந்தபோது, பாஸிஸத்தால் தாக்கப்பட்டபோது, சோவியத் யூனியன், எதிரியின் ஆகா யப் படைகளை எதிர்த்தும், இயந்திர சாதனப் படைகளை எதிர்த்தும், இராணுவத் தந்திரங்களை எதிர்த்தும் சமமாக நிற்க முடிந்தது. அதுமாத்திரமல்ல மக்களை ஒன்று திரட் டினதிலும், அவர்களை யுத்தத்திற்காகத் தயாராக வைத்திருந் ததிலும், சோவியத் யூனியன் தன்னுடைய எதிரிகளை மீறவும் செய்தது.

ஸ்டாலினுடைய உஷாரான தன்மையினுலும், புத்தி விசாலத்தின் காரணமாகவும், சோதனைக்காலம் வந்தபோது, சோவியத்திற்கு நேசநாடுகளின் உதவியானது காகிதத் தீர் மானமாக இருக்கவில்லை. தவிர்க்கமுடியாமல் அந்நாடுகள் காரியாம்சத்தில் சோவியத்திற்கு உதவி செய்யவேண்டி ஏற் பட்டது. முதலாளித்துவ ஜனநாயக நாடுகள், சோவியத் நீட்டிய கூட்டுப் பாதுகாப்பு என்ற நேசக் கரங்களை முன்பு உதறியெறிந்தன. ஆனல் சரித்திரம் தலையிடாக் கொள்கை, தனிமைக் கொள்கை முதலியவைகளைத் தகர்த் துத் தவிடுபொடியாக்கிவிட்டது. அந்த முதலாளித்துவ ஜன நாயக நாடுகள், அந்தக் கூட்டு ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்களாயின.

இன்று ஸ்டாலின் சோவியத் மக்களுக்குக் கீழ்வரு மாறு தைரியமாகச் சொல்லமுடியும். ''நம் நாட்டின் சுதந் திரத்திற்காக நாம் நடத்தும் யுத்தம், ஐரோப்பிய மக்கள், அமெரிக்க மக்கள் — ஆகியவர்கள் தங்களது சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் இவைகளுக்காக நடத்தும் போராட் டத்துடன் ஒன்ருக இணைந்துவிடும்'' என்று. (ஜூலை 3-ந் தேதிய ரேடியோ பிரசங்கம்.)

இன்றையதினம், பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதி "ஸ்டாலினுக்கு உதவி செய்யவேண்டும்" என்ற நிர்ப்பந்தத்திற்குள்ளாகி யிருக்கிருர். (பீவர்புருக்-ரேடியோ பிரசங்கம். அக்டோபர் 23).

இன்றையதினம் சோவியத்தின் பிரம்மாண்டமான தாக்குதல்களைக் கண்டு முன்பு சோவியத்தின் பலத்தில் சந்தேகம் கொண்டிருந்த பேர்வழிகளெல்லாம் ஆச்சரியப்படும்படியும், சோவியத்தை சதா குறைகூறிக் கொண்டிருந்தவர்களெல்லாம் ஊமைபோல் வாயடைத்துப் போகும்படியும் ஆனுர்கள். இன்றையதினம் பாஸிஸத்திற்கெதிரான பிரதானமான ஈட்டிமுனை எதிர்ப்பைப் போல் இருப்பது சோவியத் யூனியனே. இப்பொழுது அந்த மனிதனின் (ஸ்டாலின்) அஞ்சாத ஸ்லோகங்களை மறுபடியும் ஞாபகத்திற்குக் கொண்டுவருவது பொருத்தமாயிருக்கும். அவை தான் "அது மிகவும் நல்லது; ஆனல் அது போதாது". "நாம் இனிமேல் என்ன செய்யப் போகின்ருேம் என்பதுடன் ஒப்பிட்டால், இன்றுவரை நாம் செய்துள்ளது மிகச் சொற்பமே."

சர்வாதிகாரிகளுக்கு நேர்விரோதியான இந்த ஸ்டாலின் எப்பேர்ப்பட்ட தலைவர் அப்பா? 'ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி' என்று எத்தனைதரம் தூற்றப்பட்டிருக்கிருர் தெரியுமா! அதுவும் எப்பேர்ப்பட்ட ஸ்டாலினை? தன்னைப் பார்க்க அன்னிய நாடுகளிலிருந்து யாராவது விருந்தாளிகள் வந்தால் கீழ்க்காணும்படிக் கூறும் ஸ்டாலினை! "யாரும் தானக ஒரு முடிவு செய்யக்கூடாது. தனிப்பட்ட ஒரு நபர் செய்யும் முடிவுகள் எப்பொழுதும், ஒரு நோக்குடையதாகவே, அதாவது ஒருதலைப்பட்சமாகவே யிருக்கும். கடந்த 3 புரட்சிகளில் ஏற்பட்ட அனுபவம், தனிப்பட்ட ஒரு நபர் எடுக்கும் முடிவுகள் 100-க்கு 90 ஒருதலைப்பட்சமான முடிவு

களாகத்தானிருக்கும், என்பதைத்தான் எடுத்துக் காட்டியிருக்கின்றது. மற்ற தோழர்கள் ஒவ்வொருவரும் பிறருடைய தப்பிதங்களைத் திருத்துவதாலும், ஒவ்வொருவரும் இந்தத் திருத்தங்கள் முக்கியமானவை என்று கருதுவதாலும், நம்முடைய முடிவுகள் இதுவரைக்கும், எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு வரைக்கும் சரியாயிருந்திருக்கின்றன."

பின்வருமாறு யார், தன்னுடைய ஓட்டர்களிடம் சொல்லமுடியும்!—" ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், சொல்வதொன்று செய்வதொன்ருக இருந்தால், தங்களுடைய பாதையினின்றும் தவறிப் போவார்களேயானல், அவர்கள் தாங்கள் பொதுஜனங்களினல்தான், ஓட்டர்களினல்தான் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேம் என்பதை மறப்பார்களேயானல், அப் பிரதிநிதிகளின் (சட்டசபை) காலம் முடிவதற்கு முன்னரே, அவர்களைத் திருப்பி அழைக்க ஓட்டர்களுக்கு உரிமையுண்டு. இது ஒரு மிகவும் முக்கியமான சட்டம். ஒவ்வொரு பிரதிநிதியும்தான் ஜனங்களின் ஒரு சேவகன் என்பதையும் சுப்ரீம் சோவியத்தில், ஜனங்களின் ஒரு தூதன் என்பதையும் மறந்துவிடக் கூடாது. ஜனங்கள் தேர்ந்தெடுக்கும்போது, நாம் எந்த வழியில் செல்லவேண்டுமென்று விதித்துள்ளார்களோ அந்த வழியில்தான் செல்லவேண்டும், என்பதையும் அப்பிரதிநிதி ஞாபகத்தில் வைக்கவேண்டும். எலெக்ஷனில் ஒரு அபேக்ஷகராக நிற்கும் நான், ஓட்டர்களுக்குக் கொடுக்கும் புத்திமதி இதுவே. 'பிரதிநிதிகளின் சட்டசபைக் காலம் முடிவதற்கு முன்னரே, அவர்களைத் திருப்பி அழைக்கவும், அவர்களைக் கண்காணிக்கவும், அதாவது அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சீர்தூக்கிப் பார்க்கவும் சரியான வழியிலிருந்து அவர்கள் தவறினல் அவர்களை வெளியேற்றவும், புதிய தேர்தல்களை நடத்தும்படி செய்ய

வும் உங்களுக்கு உரிமையுண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே. தோழர்களே நீங்கள் உங்கள் பிரதிநிதிகளைத் தவருமல் ஒழுங்காக அடிக்கடி கண்காணித்து வரவேண்டும். ஓட்டர்களின் ஆதிக்கத்திலேயே பிரதிநிதிகள் இருக்கும்படியாகச் செய்வது, ஓட்டர்களின் கடமை மாத்திரமல்ல; அது அவர்களின் உரிமையுமாகும். தோழர்களே, பிரதிநிதி என்ற முறையில், நான் ஓட்டர்களாகிய உங்களுக்கு அளிக்கும் புத்திமதி இதுதான்.''

கட்சி அங்கத்தினர்களுக்கு ஸ்டாலின் கூறுவது என்ன! ''போல்ஷிவிக்குகள் பொது ஜனங்களுடன் எதுவரைக்கும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிருர்களோ, அதுவரைக்கும் அவர்களை யாரும் அசைக்க முடியாது. அதற்கு மாருக எப்பொழுது, போல்ஷ்விக்குகள் பொது ஜனங்களிடமிருந்து தொடர்பை அறுத்துக் கொள்கிருர்களோ, அப்பொழுதே அவர்கள் தங்களுடைய எல்லா சக்தியையும் இழக்கின்ருர்கள்; சூன்யமாய் விடுவார்கள். இப்பொழுது இது சம்பந்தமாக, கிரேக்க புராணத்திலுள்ள ஆண்டெயஸ் என்ற வீரனின் கதை ஞாபகம் வருகின்றது. ஆண்டெயஸ், தன்னைப் பெற்ற, பாலூட்டி வளர்த்த தாயுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்த வரையில் அவனை யாராலும் வெல்ல முடியவில்லை. அவனுக்கும், அவன் தாயுக்கும் உள்ள தொடர்பு அறுக்கப்பட்டவுடனே, ஆண்டெயஸ் வீழ்த்தப்பட்டான். ஆதலால் போல்ஷ்விக்கர்கள் பொதுஜனங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருக்கும் வரையில், அவர்களை வெல்ல யாராலும் முடியாது.''

ஜனநாயகத்தின் தன்மை இதுவரைக்கும், இந்த அளவில் இவ்வளவு திட்டமாக, நேராக, வேறு எங்கேனும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றதா? கிடையவே கிடையாது.

ஸ்டாலினுக்கு விரோதமாக தூற்றுபவர்களைப் பற்றி

கௌரின் என்ற ஒரு சோவியத் பேச்சாளர் அர்த்த புஷ்டியுடன் கூறியிருக்கும் சொற்களைக் கேளுங்கள். 'ஸ்டாலின் தான் நம் விரோதிகளின் முக்ய குறியாயிருக்கின்றார். அவர் மேல்தான் குறிப்பாக அவர்களுடைய எதிர்ப்பு 'பாணங்கள்' கிளம்புகின்றன. ஆம், அவ்வாறு அவர்கள் செய்வதில் ஆச்சரியமில்லை.''

ஸ்டாலின் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் போதும், வாலிபப் பருவத்திலும், அவருடன் கூட இருந்த தோழர்கள், அவரது குணநிசயங்களைப் பற்றி ஞாபகம் வைத்துக்கொண்டிருப்பது என்ன! "கபடமற்ற அன்பு; சாந்தம்; மரியாதை; சிடு சிடுவென்றில்லாமல் உல்லாசமாயிருப்பார்." பார்பூஸ் என்பவர் ஸ்டாலினைப் பற்றிக் கூறுவதென்ன? "அபாரமான விவேகம்" "பரந்த அறிவு" "வியக்கத் தக்க மனவமைதி", "திட்டமான அபிப்ராயங்கள்" "முன்னேற்றத்தை நோக்கியேசெல்லும் உறுதி", "எந்த முடிவையும், விரைவாகவும், திடமாகவும், நம்பிக்கையுடனும் செய்யும் திறமை", "எந்த வேலைக்கும் அதற்குத் தகுந்த சரியான ஆட்களைத் தெரிந்தெடுப்பதில் சதா கவனம் செலுத்துவது" போன்ற குணநிசயங்களை உடையவர், என்கிறார்.

"சுலபத்தில் திருப்தியடைந்துவிடக் கூடிய ஒரு மனிதரா அவர்? இல்லவேயில்லை. பார்வைக்கு அவர் அம்மாதிரியில்லாவிடினும், அவர் மிகக் கண்டிப்பான மனிதர். உருவத்தில் குட்டையானவர். ஒழுங்காக ஆடையணிந்து கொண்டிருப்பார். அவரைப் பற்றி அவலட்சணமான விஷயங்களே ஒன்றுகூடக் கிடையாது. சதா சிரிப்பதற்குத் தயாராயிருப்பார். தமாஷான விஷயங்களில் மிக சிரத்தை கொண்டவர். அத்துடன் தமாஷைத் தானே ஆரம்பிப்பார். கூரிய பார்வை. அவரது உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை உடனக்குடனே அவரது முகம் பிரதிபலிக்கின்றது. அவர்

சந்தோஷமாயிருப்பதும், கவலையாயிருப்பதும் அவரதுமுகத்தைப் பார்த்தவுடனேயே தெரிந்துகொள்ளலாம். அவர் சொல்வதை ஒத்துக்கொண்டால், உடனே இவர் முகம் சந்தோஷத்தால் பிரகாசமடைவதைக் காணலாம். யுத்த தளவாடங்களைப் பற்றி அவருக்குப் பரந்த அறிவு உண்டு.''

பார்பூஸ் சொல்லியிருப்பதை அர்த்தமற்ற புகழ்மாலை என்று எவரேனும் கருதுவாராயின் சமீபகாலத்தில், ஸ்டாலினை முதன்முதலாகச் சந்தித்த பீவர்புருக் அவரைப் பற்றி வர்ணிப்பதை கவனிக்கட்டும்.

ஸ்டாலின் நடத்திவரும் வாழ்க்கையைப்பற்றி பார்பூஸ் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்:—

ஸ்டாலின் மிகச்சாதாரணவாழ்க்கைநடத்துபவர். ''ஜன நாயகம்'' தங்களுடைய லட்சியம் என்று தம்பட்டமடித்துக் கொள்ளும் ராஜாக்களிடத்திலும், இளவரசர்களிடத்திலும் இம்மாதிரி சாதாரண வாழ்க்கையின் அம்சங்கள் துளிகூடக் காணமுடியாது. வாயில் சுருட்டுக் குழாய்: சாதாரணக் கம்பளிக்கோட்டு; விலாசமான காக்கி ட்ரவுசர்கள்—இது தவிர ஸ்டாலின் உடை எப்பொழுதும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும்.

வழக்க மாகவே ஸ்டாலின் விடியற்காலை 4 மணிக்குத் தான் படுக்கைக்குச் செல்கிறார். அதுவரை தூக்கத்தையும் கவனியாமல், வேலை செய்துகொண்டே யிருப்பார். அவருக்கு ஒரே ஒரு காரியதரிசிதான் உண்டு. ஸ்டாலின் தனக்கு வரும் கடிதங்களுக்கு பதிலெழுதும்போது, எழுதவேண்டிய விவரங்களை யெல்லாம் கொடுத்துத் தன் காரியதரிசியையே பதிலெழுதி அனுப்பிவிடும்படிச் சொல்லி விடுவார். மற்ற பூர்ஷ்வா ''தலைவர்கள்'' மாதிரி, காரியதரிசிகளை கடிதங்கள் எழுதச் சொல்லி அதில் அவர்கள் கையெழுத்து மாத்திரம் போட்டுவிடும் வழக்கம் ஸ்டாலினிடம் கிடையாது. அதே

சமயத்தில், தினசரி வரும் எல்லாக் கடிதங்களுக்கும் அன்றைய தினமே பதிலனுப்பி விடுவார். கிரெம்லின் காரியாலயத்தில் ஸ்டாலினுடைய அறைக்குச் செல்லும் ஒருவர் அங்கே வழியில் மூன்று அல்லது நான்கு பேர்களைத் தவிர வேறுயாரையும் காணமுடியாது என்று பார்பூஸ் கூறுகிறுர். கிரெம்லின் மாளிகையில், ஸ்டாலினுக்கென ஒரு சிறிய ஹால், மூன்று படுக்கையறைகள், ஒரு சாப்பிடும் அறை, இவ்வளவுதான். அவருக்கு 3 குழந்தைகள். அவைகளில் எல்லோருக்கும் மூத்த பையன் செஞ்சேனையில் ஒரு ஜூனியர் கமாண்டராக இருக்கிறுன். இவருடைய மனைவி அலிலுயீவ் 1934லேயே இறந்துவிட்டாள். அவள் ட்ரான்ஸ் காக்கேஷியாவில் ஒரு தோழருடைய மகள்.

இன்று ஸ்டாலினுக்கு ஏற்பட்டுள்ள மதிப்பு எதன் காரணமாக உண்டாயிற்று? இதற்கு ஸ்டாலினே பதில் கூறுவது என்ன? "ஒரு சில தலைவர்கள்தான் சரித்திரத்தை உண்டாக்குகின்றவர்கள் என்றகாலம் மலையேறிவிட்டது" என்கிறுர். இதைப்பற்றி பார்பூஸ் கூறுவதென்ன? "ஒரு விஷயத்தை, தன்னுடைய பரந்த அறிவு விசாலத்தின் காரணமாக முன்கூட்டியே அறிந்து, அதற்கு வேண்டியபடி எதிர்ப்பாகவோ அல்லது சாதகமாகவோ நடந்து கொள்பவர்தான் சிறந்த தலைவர் எனப்படுவர். ஒரு தலைவன் இதுவரைக்கும் யாருடைய அறிவுக்கும் எட்டாதஒரு தேசத்தைச் சிருஷ்டிப்பதில்லை. ஆனல் அதைக் கண்டுபிடிக்கிறுன்............ லெனினும், ஸ்டாலினும் சரித்திரத்தை சிருஷ்டிக்கவில்லை. ஆனல் அதைக் கண்டுபிடித்தனர். எதிர்காலத்தை சமீபத்திற்குக் கொண்டுவந்தனர்," என்கிறுர்.

சோவியத் யூனியனில், மக்கள் ஸ்டாலினிடம் அபார மரியாதையும், அன்பும் கொள்வதற்குக் காரணம் இதுதான் ஸ்டாலினிடத்தில் சோவியத்நாடு நம்பிக்கை வைப்பதற்குக் காரணம். ஸ்டாலினிடத்தில் அவர்களுக்குள்ள "பக்தி"

யினலல்ல; ஆனல் அவருடைய செயல்களினல்தான். ஸ்டாலின் சண்டமாருதப் பிரசங்கி அல்ல. தன்னுடைய பிரசங்கத் திறமையால் மக்களை மயக்கிவிடுபவர் அல்ல. இன்றைதினம் சோவியத் யூனியன் எவ்வாறிருக்கின்றது. முன்னே ரஷ்யா எந்த மாதிரியிருந்தது என்று தெரிந்துள்ளவர் யாரும் ஸ்டாலினை ஏன் அனைவரும் நேசிக்கின்றனர், என்ற கேள்வியை கேட்கமாட்டார்கள். ஏனெனில், சாப்பாட்டின் ருசி சாப்பிட்டால் தெரிந்துவிடுமல்லவா? தன் தேசமுன்னேற்றத்திற்கு ஸ்டாலின் இன்றியமையாதவர் என்ற உண்மையை ஒவ்வொரு சோவியத் பிரஜையும் தன் ஒவ்வொரு வாழ்க்கை அனுபவத்தினலும் அறிந்துகொண்டிருக்கிருன்.

இதனல்தான் தேசத்திற்கு அதி ஆபத்தான காலத்தில் ஸ்டாலின் தேசத்தின் லகானைக் கையிலேந்தி யிருக்கின்ருர். 1940 வரையில் சோவியத் மந்திரி சபையில் கூட ஸ்டாலின் அங்கம்வகித்ததில்லை. கட்சியின் பொதுக்காரியதரிசியாகவே இருந்தார். 1937-ல், சோவியத் பார்லிமெண்டாகிய சுப்ரீம் சோவியத்திற்கு ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு சுப்ரீம் சோவியத் தன்னுடைய பிரிஸிடியத்துக்கு அவரை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தது.

பிரிஸிடியம் என்பது ஒரு பார்லிமெண்டின் ஒரு கூட்டத்திற்கும், மற்றென்றுக்கும் இடையிலுள்ள காலத்தில் நிர்வாகத்தை நடத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு கமிட்டி.

1941-ல், யுத்த மேகங்கள் திரண்டு, பெரும் போர் கிளம்பும் தருணத்தில்தான், பிரிஸிடியம் இவரை, பொதுஜனக் கமிஸார்களின் கவுன்சிலுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இதற்கு முன்னல் இந்த ஸ்தானத்தை லெனின் வகித்துவந்தார். இந்த ஸ்தானம் பிரிட்டனிலுள்ள பிரதம மந்திரி ஸ்தானத்தைப் போன்றது. யுத்தம் ஆரம்பித்தவுடனே இந்த ஜாரிட்ஸின் மனிதன் (ஸ்டாலின்) தற்காப்புக் கமிஸாராகவும், தற்காப்புக் கமிட்டியின் தலைவனுகவும் ஆக்கப்பட்

டான். ("எப்பொழுதும் அமைதியே குடிகொண்டவர்; தூக்கமென்பதே கிடையாது. அவருக்கு ஒரே ஒரு எண்ணம்தான். சோவியத் ஜெயிக்க வேண்டும் என்பதே. ஸ்டாலினுடைய தகர்க்க முடியாத இந்த மன உறுதிதான் யாருக்கும் வெற்றியில் சந்தேகம் கொள்ள முடியாதவாறு செய்துவிட்டது".) முன்பு லெனின் செய்தபடியே இப்பொழுது சோவியத் மக்கள் இந்த "ஒரே மனிதனைத்தான்" மறுபடியும் அழைத்தனர்; மறுபடியும் ஒவ்வொரு போர்முனைக்கும் அனுப்பினுர்கள்; எந்தப் பகுதியில் மனித வர்க்கத்திற்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறதோ அங்கு—அந்தப் போர்முனைக் கனுப்பினர்

இன்றையப் போரில்தான் மனிதவர்க்கத்தின் விதியே நிர்ணயிக்கப்படப் போகின்றது என்பதை அறியாதோர் இன்று யாரிருக்கின்றனர்! சோவியத் போர்முனை தான் இன்று யுத்தத்தின் தலை விதியையே நிர்ணயிக்கும் போர்முனை என்பதை யறியாதார் யார்? அந்த முக்யமான முனையில்தான் ஸ்டாலினுடைய உருக்குப்போன்ற மன உறுதியும் செலுத்தப்படுகின்றது என்பதைத் தானுகவே அறிந்து கொள்ளாதவர் யார் இருக்க முடியும்?

ஒரு மனிதனுடைய எதிர்கால வாழ்க்கைக்கும் ஸ்டாலினுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி பார்பூஸ் கூறிய உண்மை ததும்பும் மொழிகளைச் சொல்லியே இக்கட்டுரையை முடிக்கவிரும்புகின்றேன்: கேளுங்கள்.

"புத்திக்கூர்மையுள்ள பெரிய அறிவாளி; பார்ப்பதற்குத் தொழிலாளியின் முகம்; ஒரு சாதாரண சோல்ஜரின் உடை. நீ யாராகத்தான் இருந்தால் என்ன! உன் எதிர்கால வாழ்வு அவரையே பொறுத்துள்ளது. அவர் உன்னையே கவனித்து வருகிறுர். உனக்காகவே உழைத்து வருகிறுர்."

சில முக்யமான வருஷங்கள்

1879— ஜார்ஜியா மாகாணத்தில் கோரி என்னுமிடத்தில் பிறந்தார். (ஸ்டாலின்)

1888—94 கோரியில் கிருஸ்தவ மதப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலுதல்.

1894—99 டிப்ளிஸ் நகரத்தில் மதக் கோட்பாடுகளைப் போதிக்கும் பள்ளிக்கூடத்தில் கல்வி. பள்ளியி லின்றும் நீக்கப்படுதல்.

1898-1901 டிப்ளிஸ் சோஷல் டிமாக்ரேட்டுகளுடன் சேர்ந்து தொழிலாளிவர்க்கத்தினிடையே வேலை செய்தல்.

1901—02 பாடும் நகரத்தில் தொழிலாளிகளின் ஸ்தாபனம் அமைக்கப் படுதல்—முதல் தடவையாக ஸ்டாலின் கைதி செய்யப்படுதல்.

1902—17 இந்தக் காலத்தில் 6 தடவை கைதி செய்யப்படுதல் ; 5 தடவை தப்பியோடுதல் ; ஆறுவது தடவை ஆர்க்டிக் பனிக்கட்டிப் பாலைவனத்திற்கு நாடு கடத்தப்படுதல்.

1904—10 பக்கு, டிப்ளிஸ் நகரங்களில், புரட்சிக்காக தொழிலாளி வர்க்கத்தைத் தயார் படுத்துதல்.

1905— டேமர் போர்ஸ் நகரத்தில் லெனினை சந்தித்தல்.

1906— சோஷல் டிமாக்ரேடிக் கட்சியின் ஸ்டாக்ஹோம் காங்கிரஸ்.

1907— லண்டன் காங்கிரஸ்.

1912— ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி அங்கத்தினராகவும், அதனுடைய ரஷ்யப் பகுதியின் அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்

கப்படுதல், க்ரேகோ நகரத்தில் லெனினுடன் சம்பாஷித்தல்.

1913— "மார்க்ஸிஸமும் தேசியப் பிரச்னையும், காலனிகள் பிரச்னையும்" என்ற புஸ்தகம் வெளியிடுதல்.

1911—13 "ப்ராவ்டா" பத்திரிகை ஆரம்பித்தல்; கட்சிப் பத்திரிகைக்கு வழி காட்டுதல். செண்ட் பீடர்ஸ் பர்க் நகரத்தில் டுமா (ஜார் பார்லிமெண்டு)வி லுள்ள போல்ஷிவிக் பிரதிநிதிகளுக்கு வழி காட்டுதல்.

1913—17 6-வது தடவை ஸ்டாலின் கைதி செய்யப்படுதல்; ஆர்க்டிக் பிரதேசத்திற்கு நாடு கடத்தப் படுதல்.

1917— ப்ராவ்டா பத்திரிகையின் ஆசிரியராதல்; லெனினுடன் கூடவே பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்களைத் தயாரித்தல்—அக்டோபர் புரட்சி.

1917— தேசிய சமூகங்களுக்கு கமிஸாராக (மந்திரியாக) நியமிக்கப்படுதல்.

1918—20 உள்நாட்டுச் சண்டைகள். 'பர்ஸ்ட் ஆர்டர் ஆப் தி ரெட் பேனர்' (First Order of the Red Banner) என்ற பட்டம் பெறுதல்.

1919— தொழிலாளிகள், விவசாயிகள் இன்ஸ்பெக்ஷன் கமிஸாராக நியமிக்கப்படுதல்.

1920—23 யுத்தக் கவுன்சில் மெம்பராதல்.

1924— கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுக் காரியதரிசியாக நியமிக்கப்படுதல்.

1924— லெனின் காலமாதல்; "லெனினிஸத்தின் அஸ்திவாரங்கள்" என்பதைப் பற்றி பிரசங்கங்கள்.

1925— தேசம் பூராவும் இயந்திரத் தொழில் மயமாக்கும் திட்டம் ஆரம்பித்தல்.

1927— தேசம் பூராவும் கூட்டுப் பண்ணை மயமாக்கத் திட்டமிடுதல்.

1929— முதல் 5 ஆண்டுத் திட்டம்.

1930— சோஷியலிஸ்டு அமைப்பைக் கட்டுவதற்காக அவர் செய்த சேவைக்கு, சகண்ட் ஆர்டர் ஆப் தி ரெட் பேனர் (Second Order of the Red Banner) பட்டம்.

1931— வேலையில் திறமை (டெக்னிக்) வேண்டும் என்ற இயக்கம்.

1933— முதல் 5 ஆண்டுத் திட்டம் 4 வருஷங்களில் பூர்த்தி செய்யப்படுதல். கூட்டுப் பண்ணைகள் அபிவிருத்தியடைவதற்கான இயக்கம்.

1935— ஸ்டக்கானேவ் இயக்கம்; புதிய ஸ்டாலின் கான்ஸ்டிடியூஷன்.

1939— மூன்றாவது 5-ந்தாண்டுத் திட்டம்.

1941— பொதுஜனக் கமிஸார்களின் கவுன்சிலுக்கு சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் (பிரதம மந்திரி)

1941— தற்காப்புக் கமிஸாராகவும், தேசத்தின் தற்காப்புக் கமிட்டியின் சேர்மனாகவும் தேர்ந்தெடுக்கப்படுதல். (சுப்ரீம் சோவியத்திற்கு மாஸ்கோவின், ஸ்டாலின் எலக்டொரல் ஜில்லாவின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுதல். நவம்பர் 1937.)



வரோஷிலாவ்　　　　　　　　　　　　ஸ்டாலின்